உ


ஸ்ரீ பரராஜசேகரப்பிள்ளையார் துணை

# பரராசம்

அறநெறிப்பாடசாலை மாணவர்களின் ஆக்கங்கள்
தாங்கி வரும் மஹோற்சவ சிறப்பிதழ்

இதழ்–04

வைகாசி 2016



வெளியீடு

திருநெறிய தமிழ் மறைக்கழகம்

ஸ்ரீ பரராஜசேகரப்பிள்ளையார் அறநெறிப் பாடசாலை

06.06.2016

உ

ஸ்ரீ பரராஜ சேகரப்பிள்ளையார் துணை

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

இதழ்-04 வைகாசி 2016



ஸ்ரீ பரராஜசேகரப்பிள்ளையார் ஆலய மஹோற்ஷவத்தை முன்னிட்டு,
அறநெறிப்பாடசாலை மாணவர்களின் ஆக்கங்கள் தாங்கிவரும்

## இதழ்-4

# பரராசம்

வெளியீடு:

**ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார்**
**அறநெறிப்பாடசாலை**
**திருநெறிய தமிழ் மறைக் கழகம்**
**இணுவில்**

*06-06-2016*

நூலின் பெயர்: பரராசம்

தொகுப்பாசிரியர்: திருமதி வைகுந்தம் கணேசபிள்ளை

மொழி: தமிழ்

எழுத்து: 13 Pt. கலகம்

பக்கம்: iv+29

வெளியீடு: ஸ்ரீ பரராச சேகரப்பிள்ளையார் அறநெறிப்பாடசாலை,
திருநெறிய தமிழ் மறைக் கழகம்- இணுவில்


நான்காம் பதிப்பு: 2016

பதிப்புரிமை: திருநெறிய தமிழ்மறைக் கழகம்

பதிப்பகம்: கஜன் பிறிண்டேஸ் கோண்டாவில்

## பொருளடக்கம்

1. ஸ்ரீ பரராசசேகரன் தேரேறி வரும் மணியோசை கேட்கிறது.
2. ஆசியுரை
3. வாழ்த்துரை
4. என்னுரை
5. வெளியீட்டுரை
6. அறநெறிப்பாடசாலை வாழ்த்து
7. இணுவில் பெரிய சந்நியாசியார்
8. சங்கீத மும்மூர்த்திகள்
9. சமய ஒழுக்க விழுமியங்கள்
10. ஆலய வழிபாடு
11. காரைக்கால் அம்மையார்
12. திருவள்ளுவரும் திருக்குறளும்
13. சிவபெருமான்
14. முருகன்
15. அறுகம்புல்லின் சிறப்பு
16. விநாயகரை குட்டி கும்பிடுவோம்
17. சிவராத்திரி
18. திருக்குறளும் செய்நன்றியறிதலும்
19. வள்ளுவர் வாழ்க்கை நெறி
20. யோகர் சுவாமிகள்
21. விருந்தோம்பல்
22. சேக்கிழாரும் பெரியபுராணமும்
23. சதாவதானி கதிரவேற்பிள்ளை
24. ஆசிரியம் பேசுகிறது
25. பரிசு பெறுவோர்
26. தர்மாசிரியர் பரீட்சையில் சித்தியடைந்தோர்
27. நன்றியுரை



## ஸ்ரீ பரராசசேகரன் தேரேறி வரும் மணியோசை கேட்கிறது.

சங்கு முழங்கு மொலி கேட்டிடவே ஐயன் பரராசசேகரன்
தேரேறிவரும் மணியோசை கேட்கிறது
பொங்குங் கடலலை வீசிஎழுகிறது ஐயன் தேரேறிப்பக்குவமாய்
பவனி வரும் காட்சி தெரிகிறது
திங்களும் வானத்தில் உலாவருகிறான் தினகரனும்
பொற்கரங்கள் நீட்டி வணங்குகின்றான்
கங்குல் பகலாக மாறியது பார்முழுவதும் பஞ்சமுகவிநாயகன்
பரராசசேகரன் அருளாட்சி புரிகிறது.

பக்தர் கூட்டம் நாற்புறமும் வந்து கூடுகிறார்
பரராசனருள வேண்டி நிற்கின்றார்.
சித்தர் கணங்களும் வந்து வந்து கூடுகிறார்.
பரராச சேகரன் பேரருள் பொலிகிறது.
எத்திசையுமே வேதபாராயண ஒலி கேட்கிறது.
பரராசசேகரன் தேரூர்ந்து வருகையிலே
தித்திக்கும் திருவருட் பேறு கிடைக்கிறது ஐயன்
பஞ்சமுகமாயருள் பொலிகின்றான்.

கேட்டவரக்கு கேட்டவரம் கொடுக்கின்றான்.
கேளாதவர் பிணியும் போக்குகின்றான்.
நாட்டமுடன் நாளும் வழிபடுபவர்க்கு சித்துகளை
அள்ளி ஐயன் வழங்குகிறான்.
தேட்டம் நீயே என்போர்க்கு தெவிட்டாத
பேரின்பத்தை பெரிதும் கொடுக்கின்றான்.
கூட்டமாய்ச் சேர்ந்து தேர்வடம் பிடித்திழுக்கும்பக்தர்கு
பின்னே சென்று சென்று அருளுகின்றான்.

ஆக்கம் திருமதி.வை.கணேசபிள்ளை

உ

ஸ்ரீ கணபதி துணை

THIRUVARULMIKU SRI PARARAJASEGARAP PILLAIYAR THIRUKKOVIL
INUVIL

திருவருள்மிகு ஸ்ரீ பரராஜசேகரப்பிள்ளையார் திருக்கோவில்
இணுவில்

Regd. No:-HA/5/JA/486 T.P:-021 224 1709

*Sivasri V. Somaskanthakurukkal*
*Governing Authority & chief Prist*

சிவஸ்ரீ. வை. சோமாஸ்கந்தக் குருக்கள்
ஆதீனகர்த்தாவும் பிரதம சிவாச்சாரியாரும்

21/05/2016

## ஆசியுரை

'பரராசம்' என்கின்ற இந்நூல் ஸ்ரீ பரராஜசேகரப்பிள்ளையார் கோயிலின் அறநெறிப்பாடசாலை மாணவர்களின் ஆக்கங்களை தாங்கி மஹோற்சவ சிறப்பிதழாக வெளிவருகின்றது.

கலாபூசணம் பண்டிதை திருமதி.வை.கணேசபிள்ளையின் பெரும்முயற்சியால் பல கஸ்டங்களுக்கு மத்தியில் இக்குழந்தைகளை நெறிப்படுத்தி அவர்களின் ஆக்கங்களினை வெளிக்கொணர்ந்து இந்நூலை அலங்கரித்துள்ளார். இந்நூலானது எம்பெருமானாகிய பரராஜசேகரப்பிள்ளையாரின் தேர்த்திருவிழாவின் போது வெளிவருவது ஒரு சிறப்பம்சமாகும். திருநெறிய தமிழ் மறைக்கழகமும் அறநெறிப்பாடசாலையும் மாணவர்களும் மேலும் சிறப்படைய வாழ்த்தி ஆசீர்வதிக்கிறேன்.

வை.சோமஸ்கந்தகுருக்கள்

# பாதம் பணிவோர்க்கு துணை நிற்கும் விநாயகன்

ஸ்ரீ பரராச சேகர விநாயகப் பெருமானின் புகழ் பரப்பும் பரராசம் 4 எனும் மலருக்கு வாழ்த்து செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். திருநெறிய தமிழ்மறைக்கழகத்தின் வெளியீடாக ஆண்டுதோறும் வெளிவரும் பரராசம் மலரானது அறநெறிப்பாடசாலை பற்றிய தகவல்களோடு பரராச சேகரப்பிள்ளையாரின் பெருமைகளை எடுத்து கூறும் மலராக வெளிவருவது பெருமைக்குரியதாகும். இம்மலரை ஆக்குவதற்கு திருநெறிய தமிழ்மறைக்கழகத்தின் அமைப்பாளர் கலாபூசணம் பண்டிதை திருமதி. வை. கணேசபிள்ளை அவர்கள் எடுத்துவரும் முயற்சி பாராட்டுவதற்குரியதாகும்.

அறநெறிப்பாடசாலை மாணவர்களிடையே சமய அறிவையும் ஆளுமைவிருத்தியையும் கொண்டுவருவதற்காக ஆண்டு தோறும் சமய அறிவுப் போட்டி பண்ணிசைப்போட்டி நடனப்போட்டி, மிருதங்கப்போட்டி போன்ற பல்வேறுபட்ட போட்டிகளை நடாத்தி வெற்றிபெறும் மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கும் திட்டத்தை திருநெறிய தமிழ்மறைக்கழகத்தின் அறநெறிப்பாடசாலை நடைமுறைப்படுத்துகிறது. எமது கிராமத்தினதும் அயற்கிராமத்தினதும் மாணவர்கள் சமய வாழ்வினையும் ஆளுமை விருத்தியினையும் மேம்படுத்தி அவர்களின் சமயவிழுமியம் மேம்பட உழைக்கும் திருநெறிய தமிழ்மறைக்கழகத்திற்கும் அறநெறிப்பாடசாலையினருக்கும் எனது வாழ்த்தினையும் பாராட்டினையும் தெரிவித்துக் கொள்வதுடன் பரராசம் மலர் தடையின்றி ஆண்டு தோறும் வெளிவர வேண்டுமென எல்லாம் வல்ல பரராஜசேகரவிநாயகனை இறைஞ்சி நிற்கின்றேன்.

பேராசிரியர்க. தேவராசா
தலைவர்
வணிகத்துறை
யாழ்பல்கலைக்கழகம்

# என்னுரை

ஸ்ரீ பரராச சேகரப்பிள்ளையார் திருவருளினால் ஆண்டுமலர் 'பரராசம்' 4வது இதழ் வெளிவருகின்றது. இந்நூலில் அறநெறி மாணவர்களது ஆக்கங்களும் ஆசிரியர்களது ஆக்கங்களும் இடம்பெறுகின்றன. முக்கியமாக அறநெறி மாணவர்களது ஓராண்டு செயற்பாடுகள், போட்டிகளில் பங்கு பற்றி பெற்றுக்கொண்ட பெறுபேறுகள் (அதாவது பேச்சு, நடனம், பண்ணிசை, மாலை கட்டுதல், கோலம் போடுதல், தோரணம் பின்னுதல்) யாவும் படமாக தரப்பட்டுள்ளன.

எமது அறநெறிப்பாடசாலையின் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் யாவும் இந்து கலாச்சார அலுவல்கள் அமைச்சினால் (05.12.2015) படம்பிடித்து திரையிடப்பட்டு காட்டப்பட்டது பெருமைக்குரிய விடையமாகும்.

அகில இலங்கை அறநெறிப்பாடசாலைகளுக்கு இடையிலான போட்டிகளில் எமது பாடசாலை குழு நடனத்தில் 14 மாணவர்கள் பங்குபற்றி தேசியவிருதை 2ம் இடமாக பெற்றுபெருமை சேர்த்துள்ளனர். நடன ஆசிரியர்களது அயராத முயற்சி பாராட்டப்படவேண்டியது ஒன்றாகும். மேலும் யாழ் மாவட்டத்தில் தனி நடனம்~1ம் இடம், குழு நடனம்~2ம் இடம், வில்லிசை 1ம் இடம், கட்டுரை, ஓவியம் என்பன முதலாம் இடங்களை பெற்றுள்ளன.

எமது அறநெறிப்பாடசாலையின் வெற்றிக்கு உறுதுணையாக இருந்து உதவி வழங்கி வருபவர்கள் இவ்வூர் வர்த்தக பெருமக்களாவர். திரு.இ.குகவரதன், திரு.கு.கருணா, இ.சற்குரு து.சிவராசா, என்போர் ஆசிரியர் கொடுப்பனவை கவனிக்கின்றனர். வருடாவருடம் நூல்வெளியீட்டுக்கு திரு.க.சிவபாலன், திரு.சி.பேரின்பம், அவர்களும் சிறுதொகை அன்பளிப்பு செய்து வருகின்றனர். மேலும் இந்த வருடம் தேசிய விருது பெறுவதற்கு சென்ற எமது அறநெறிப்பாடசாலை மாணவர்கள் 14 பேரையும் அவர்களது பெற்றோரையும், உதவிக்குச் சென்ற ஆசிரியர்களையும், தங்குமிடம் கொடுத்து உணவு கொடுத்து ஆதரவழித்த ஊர்ப் பெரியவர்கள் சற்குரு மயூரநாதன், திரு.பாலசுப்பிரமணியம், செல்வநாயகம் என்போரை நன்றியுடன் பாராட்டுகின்றோம்.

மற்றும் பண்ணிசைப்போட்டி மாணவர்களுக்கு தங்கப்பதக்கங்கள் வெள்ளிப்பதக்கங்கள் தந்து உதவுவோருக்கும் செலவுசெய்தோருக்கும் நன்றிகூறுகிறோம். எமது அறநெறிப்பாடசாலை சீராக இயங்குவதற்கு ஒத்துழைத்து இடவசதி செய்து ஆதரவு தரும் து.சிவராசா, த.பராபரம், ஏனையோருக்கும் நன்றிகள்.

எல்லோருடைய ஒத்துழைப்புமே எமது அறநெறிப்பாடசாலையின் வளர்ச்சிக்கு உதவுகிறது. இது மேலும் தொடர எல்லாம் வல்ல பரராச சேகரன் எல்லோருடைய உள்ளங்களிலும் நின்று வழிநடத்தட்டும்.

நூல் பொறுப்பாசிரியர்
திருமதி. வை.கணேசபிள்ளை

# வெளியீட்டுரை

எமது திருநெறிய தமிழ்மறைக்கழகத்தினால் நடாத்தப்பட்டு ஸ்ரீ பரராச சேகரப்பிள்ளையார் அறநெறிப்பாடசாலை 'பரராசம்' இதழ் நான்கை முன்னின்று வெளியிட்டு வைப்பதில் எமது கழகம் பெருமகிழ்ச்சியடைகிறது. பெரும்பான்மை மாணவர்களது ஆக்கங்கள் செயற்பாடுகள் தாங்கிய இந்நூல் சிறக்க வாழ்த்துகிறேன்.

28.02.1992 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலையானது பல்துறை சார்ந்த சாதனைகளை படைத்துள்ளது. வலைய, மாவட்ட, தேசிய விருதுகளை பெற்று பெருமைசேர்த்துள்ளது. மேலும் இதை ஆரம்பித்து வைத்த ஆசான்களையும் அதனை தொடரந்து வளரும் விருட்சமாக்கியவர்களையும் மனதாரப் பாராட்டுகிறோம்.

யாவற்றுக்கும் அத்திவாரமாக நின்று சுமைதாங்கியாக நின்று மண்டப வசதி, பணஉதவி புரிந்து வரும் குகன், கருணா குடும்பத்தினருக்கு நன்றியுடையோம். அவர்களது உறுதுணையும் ஸ்ரீ பரராஜசேகரன் அருளும் இவ் அறநெறிப் பாடசாலை வளர உந்து சக்திகளாகும்.

திரு. இ.மயூரநாதன், திரு. இ.சற்குருநாதன், திரு. த. பாலசுப்பிரமணியம், திரு. அ.செல்வநாயகம், திரு. த. பராபரம் எமது மாணவர்கள் தேசிய விருது பெறக் கொழும்பு சென்ற போது வேண்டிய பயணவசதி, விடுதி, உணவு வசதிகள் செய்து கொடுத்துதவினார்கள். மேலும் உள்நாட்டு வெளிநாட்டு பிரமுகர்கள் உதவிவருகிறார்கள். ஆண்டுதோறும் சிவராத்திரி நிகழ்வில் தேனீர் விருந்து தந்து உதவிவருபவர் அண்ணா நிறுவனம் கண்ணதாசன் அவர்கள். எல்லோருடைய நல்ல மனப்பாங்கும் உதவியும் அறநெறிப்பாடசாலையை கொண்டு நடாத்த உதவுகிறது. இந்த உதவி எமக்கு தொடர வேண்டும் என்று ஸ்ரீ பரராசசேகரப்பிள்ளையாரை வேண்டுகிறோம். வளர்க அறநெறி~ வாழ்க திருநெறிய தமிழ்மறைக்கழகம்.

இங்ஙனம்
ச.முகுந்தன்
தலைவர்
திருநெறிய தமிழ்மறைக்கழகம்

# அறநெறிப்பாடசாலையின் நிகழ்வுகள்
























# அறநெறிப்பாடசாலையின் நிகழ்வுகள்






















# அறநெறிப்பாடசாலையின் நிகழ்வுகள்









# அறநெறிப்பாடசாலையின் நிகழ்வுகள்

















உ

# ஸ்ரீ பரராஜசேகரப்பிள்ளையார் அறநெறிப்பாடசாலை வாழியவே

ஏழிசை வாழ்த்திடும் இணுவையாம் பதிபுகழ்
அறநெறிப் பாடசாலை வாழியவே!

ஸ்ரீ பரராஜசேகரன் அறநெறிப்பாடசாலை
ஏற்றமுடன் என்றென்றும் வாழியவே!

கொன்றை வேந்தன் ஆத்திசூடி மூதுரை நல்வழி
நன்நெறி திருக்குறள் ஒழுக்கக் கல்வி புகட்டி
சைவமுந் தமிழும் தழைத்திட நாளும்
உழைத்திடும் எங்கள் பாடசாலை வாழியவே!
ஸ்ரீ பரராஜ...

பரதக் கலையொடு பண்ணிசை வளர்த்து
மிருதங்கக் கலைகளும் அள்ளித் தந்திடும்
பரராஜசேகரப்பிள்ளையார் அறநெறிப்
பாடசாலை என்றென்றும் வாழியவே!
ஸ்ரீ பரராஜ....

**திருமதி வை. கணேசபிள்ளை**
பொறுப்பாசிரியர்

# இணுவில் பெரிய சந்நியாசியார்



இலங்கையின் வடபால் அமைந்தது யாழ்ப்பாணம். யாழ்ப்பாணத்தில் பேர்பெற்ற 12 ஊர்களில் சிறப்புப் பெற்ற கிராமம் இணுவையம்பதி. சித்தர்களாலும் பக்தர்களாலும். கவினுறுகலைகளாலும் கல்வியாலும் மண் வளத்தினாலும் சிறப்புப் பெற்ற ஊர் இணுவில் இத்தகைய வளமிக்க இணுவிற்பதி கிழக்கில் அரசோலை எனும் குறிச்சியிலே வாழ்ந்த சைவ வேளார் கந்தருக்கும் தெய்வானைப் பிள்ளைக்கும் 1860ம் ஆண்டு இரண்டாவது மகனாக அவதரித் தவரே பெரிய சந்நியாசியார். இவரது இளமைப்பெயர் சுப்பிரமணியம் கருவிலே திருவுடையவர். தவசீலர் பெற்றோர்கள் விவசாயிகளாக இருந்தமையால் அவர்களது விவசாயப்பணியை செய்து வந்தார். பெரும்பாலும் கால்நடைகளை மேய்க்கும் பணியில் காலத்தை கழித்து வந்தார்.

இயல்பாகவே இறைநாட்டம் கொண்ட இவர் அதிகாலையில் துயில் எழுந்து காலைக்கடன்களை முடித்து கடவுளை வணங்கித் தன்அண்றாடப் பணியான ஆடுமாடுகளை மேச்சலுக்கு கொண்டு சென்று மாலைநேரம் அவைகளை தொழுவத்தில் சேர்ப்பார். மதிய உணவை தாயார் கொண்டு சென்று கொடுப்பது வளக்கம்.

ஒரு நாள் தாய் உணவு கொண்டுவர நேரமாகிவிட்டது. பசியால் துடித்துப்போன சுப்பிரமணியம் காரைக்கால் மாரியம்மனை நினைத்து காரைக்கால் மாரியம்மனே தஞ்சம் என்று வணங்கி விட்டு மரநிழலிலே படுத்துறங்கிவிட்டார். ஞானசம்பந்தருக்கு பாலமுதம் கொடுத்த தாய் சுப்பிரமணியத்தின் பசியை நீக்க சித்தம் கொண்டார். சுப்பிரமணியின் தாய் போல வடிவெடுத்து, ஓலையால் இழைத்த மூடல் பெட்டியில் சாப்பாடு கொண்டு வந்து கொடுத்தாள். சந்நியாசியார் தாய்தான் உணவு தந்தார் என நினைப்போடு பெட்டியை திறந்து உண்டு மகிழ்ந்தார். இத்திருவமுதம் உண்ட சுப்பிரமணியம் ஞானம் பெற்று சித்தரானார். அவரது செயற்பாடுகள் யாவற்றிலும் தெய்வீகத்தன்மை விளங்கியது. சிறிது நேரங்கழித்து உணவுடன் வந்தார் தாயார். சம்பவத்தைக் கண்டு வியந்து போனார். தனவடிவிலே மகனுக்கு உணவு கொடுத்து ஆட்கொண்டவள் மாரியம்மனே என்று உள்ளம் பூரித்தார். இந்த அற்புத செயலை எல்லோரும் அறிந்தனர். அம்மனின் திருவருட் செயலை போற்றித் துதித்தனர்.

சித்தரான சுப்பிரமணியம் ஆடினார், ஓடினார், ஆனந்தமுற்றுப் பாடினார். தவக்கோலம் பூண்ட சுப்பிரமணியம் யாவரையும் அன்புடன் அரவணைத்தார். இவ்வற்புதச் செயலை நேரிலே கண்டு களிக்க வேற்றூர்களிலிருந்து மக்கள் கூட்டம் திரள் திரளாக வந்து கூடியது.

தீராத பிணிகளைத் திருநீறு சாத்தி மணிமந்திரமோதித் தீர்த்தார். சித்தமருத்துவபணிகள் தொடர்ந்தன. அதற்கான மூலிகைத்தோட்டம் காரைக்காலில் அமைக்கப்பட்டன. பில்லி சூனியம் பேய் பிசாசு எனவருவோருடைய பிணிகள் முற்றாக தீரத்து வைத்தார். காரைக்கால் சூழலில் மக்கள் வந்து தங்கியிருந்து நோய் நீக்கிச் சென்றனர். பக்தர்களினுதவியோடு காரைக்காலில் நிழல் தருமரங்கள், பயன்தரு மரங்கள், சித்தமருத்துவ மூலிகைகள் உருவாக்கப்பட்டன. மக்களுக்காகவும் கால்நடைகள் நீரருந்தவும் ஐந்து திருக்குளங்களும், இரண்டு கிணறுகளும் தோண்டப்பட்டன. காரைக்கால் சிவாலயம் புனருத்தாரணம் செய்யப் பெற்று பெருமை பெற்றது. பூசை வழிபாடுகள் ஒழுங்காக அமைந்தன. கடவுள் நம்பிக்கையும் ஆத்மீகசிந்தனையும் மக்களிடையே குடிகொண்டது.

மாரியம்மனால் ஆட்கொள்ளப்பட்ட பெரிய சந்நியாசியார் கனவில் இணுவில் முருகன் தோன்றி தான் வீதியுலா வருவதற்கான மஞ்சம் ஒன்றை உருவாக்கும் படி தெரிவித்தார். இறைவனின் கட்டளையைச் சிரமேற் கொண்டு செய்யப்பட்டதே இணுவில் முருகன் உலாவரும் உலகப்பெரு மஞ்சமாகும். நினைத்துப் பார்க்க முடியாத அளவு சிற்ப வேலைப் பாடுகள் அமைந்த இவ் பெரிய மஞ்சம் மஞ்சத்தடி என்று தற்போது அழைக்கப்படும் இடத்தில் வைத்து உருவாக்கி பெருவீதியமைத்து இணுவில் கந்தசாமி கோவிலுக்கு இழுத்துவரப்பட்டது.

சமாதி:- முக்காலமும் உணர்ந்த சித்திராகையில் தமது சமாதிக்காலத்தை முன்கூட்டியே தனது பக்தர்களுக்கு உணர்த்தி வைத்தார். அதன் படி குறிப்பிட்ட இடத்தில் ஆறடி ஆழமான கிடங்கு வெட்டப்பட்டிருந்தது. 1917ம் ஆண்டு சித்திரைத் திருவோணத்தில் சமாதி அடைந்தார். அவரது உடல் ஏற்கனவே அமைக்கப்பட்ட சமாதிக்கிடங்கில் உரிய முறைப்படி சமாதியாக வைக்கப்பட்டு அதன் மேல் அவரால் வைத்து வணங்க ப்பட்ட வேலாயுதம் வைக்கப்பட்டு பூசிக்கப்பட்டது. காலப்போக்கில் இவ்வாலயம் இன்று மஞ்சத்தடி அருணகிரிநாத சுப்பிரமணிய முருகன் ஆலயமாக திகழ்கிறது. இவ்வாலயம் சந்நாசியாருடைய அருட்பிரகாசத்துடன் சிறப்புற்று விளங்குகிறது. இவரது குருபூசை தினம் சித்திரை திருவோணமாகும்.

பா. சத்தியமூர்த்தி ஆசிரியர்
கழகச்செயலாளர்

# சங்கீத மும்மூர்த்திகள்

கர்நாடக இசை வரலாற்றில் 18ம் 19ம் நூற்றாண்டுகள் ஒரு பொற்காலமாகும். இவ்நூற்றாண்டுகள் பொற்காலமாக திகழ்வதற்கு வித்திட்டவர்கள் சங்கீதமும்மூர்த்திகளாவர். இவர்கள் தமிழ் நாட்டிலே தஞ்சாவூர் மாவட்டத்திலே திருவாரூரிலே அவதரித்தனர். இதனால் திருவாரூர் மூவரெனவும் சிறப்பிக்கபடுகின்றனர். அந்தவகையில்

1. சியாமாசாஸ்திரிகள்
2. தியாகராஜசுவாமிகள்
3. முத்துசுவாமிதீட்சிதர்

ஆகிய மூவரும் சங்கித மும்மூர்த்திகளாவர் இவர்களின் வாழ்க்கைச் சுருக்கத்தையும் இசைப்பணியையும் நோக்குமிடத்து.

**சியாமசாஸ்திரிகள்**

இவர் கி.பி 1762ஆம் ஆண்டு இவ்வுலகில் அவதரித்தவர். இவருக்கு "வெங்கட சுப்பிரமணியன்" என்னும் பெயர் முதலில் இடப்பட்டது. இருந்தபோதும் எல்லோரும் இவரை "சியாமகிருஸ்ணா" என்ற செல்லப் பெயரால் அழைத்தனர்.

இளமையிலேயே சமஸ்கிருதம், தெலுங்கு ஆகிய மொழிகளில் பாண்டித்தியம் பெற்றார். சியாமசாஸ்திரிகள் முதன்முதலில் இசைபயின்றது அவரது மாமனாரிடத்திலேயாகும். தஞ்சாவூருக்கு வந்த சங்கீத சுவாமிகள் சியாமா சாஸ்திரிகளை உற்று நோக்கி தனக்கு தெரிந்த சங்கீதமர்மங்களை இவருக்கு சொல்லிக்கொடுக்க விரும்பினார். சாஸ்திரிகளும் சங்கீத சுவாமிகளின் சீடனாகி பல இசை நுட்பங்களையும் பயின்றார்.

சியாமா சாஸ்திரிகள் இளமையிலேயே கீர்த்தனைகளியற்றும் ஆற்றலை பெற்றிருந்தார். இவர் வெள்ளிக்கிழமைகளிலும் விசேட தினங்களிலும் பங்காரு காட்சியம்மன் கோயிலில் தியானம் செய்வார். தியானம் செய்யும் போது கண்களால் நீர்பெருகுவதுண்டு. இச்சந்தர்ப்பத்திலேயே அனேக கீர்த்தனைகளை இயற்றினார்.

மதுரை மீனாட்சி அம்மன் பேரில் "நவரத்தின மாலிகை" க்ருதியை இயற்றினார். இவர் அபூர்வ இராகங்களிலும் க்ருதிகளை இயற்றியுள்ளார். ஆனந்த பைரவி இராகம் இவருடைய சொத்து என கூறப்படுகிறது. இவருக்கு மிக விருப்பமான இராகமும் இதுவே. இராக முத்திரைகளை கையாண்டு சிறப்பாக க்ருதிகளை யாத்துள்ளார். விலோம சாபு தாளத்தை கையாண்ட சிறப்புக்குரியவர்.

இவருடைய பாடல்கள் சொற்சுவை, பொருட்சுவை, இசைச்சுவை நிறைந்தவையாக உள்ளமை குறிப்பிடத்தக்கது. இவருடைய முத்திரை "சியாமகிருஸணா" என்பதாகும். இலர் கி.பி 1827ம் ஆண்டு மாசி மாதம் 06ம் நாள் இறைபதம் எய்தினார். இசையுலகு வணங்கும் அளவிற்கு வாழ்ந்து இசைத்தொண்டாற்றியுள்ளார்.

## தியாகராஜ சுவாமிகள்

இவர் கி.பி 1767ஆம் ஆண்டு வைகாசி மாதம் 04ம் நாள் இராமப்பிரம்மம் என்பவருக்கு மகனாக அவதரித்தார். இவருடைய பாட்டனார். கிரிராஜகவி சமஸ்தான வடமொழிப்புலவராவர்.

இவருடைய தந்தையார் தினமும் காலையில் எழுந்து காவிரிக்கு செல்லும் போது சொண்டி வெங்கட ரமணய்யரின் வீடுவழியாக செல்வது வழக்கம் அவரது வீட்டில் இசை பயிற்சி இடம் பெறுவதை அவதானித்த தியாகராஜரின் தந்தை இராமபிரம்மம் தன்மகனை அவரிடம் சீடனாக சேர்க்க விரும்பினார். தியாகராஜரும் சொண்டி வெங்கட ரமணய்யரிடம் சீடனாக இணைந்து இசை பயின்றார்.

சொண்டி வெங்கட ரமணய்யர் தியாகராஜரை ஒருமுறை வித்துவான்கள் சபையிலே பாடவைத்த போது "தொரகுணா இடுவண்டி சேவ..." எனும் க்ருதியை பாடி எல்லோரையும் மகிழ்வித்தார். ஒருமுறை வித்துவான்கள் சபையிலே தியாகராஜர் பாடுவதற்காக இரவு எட்டு மணிமுதல் பத்து மணிவரை நேர நிர்ணயம் செய்யப்பட்டது. அப்போது காம்போதி இராகத்தை மிக அழகாக பாடினார். பாடிமுடித்த பின் நேரத்தை பார்த்த போது விடியற்காலை ஐந்து மணியாகிவிட்டது. இவ்வாறாக இசையிலே தன்னை மறந்து பாடும் ஆற்றல் இவருக்கிருந்தது.

ஒரு சமயம் ஹரிதாஸ் என்ற சந்நியாசி இராம நாமத்தை தொன்னூற்றாறு கோடி தடவை உச்சரிக்கும் படி சொல்லிச் சென்றார். அவ்வாறே அவர் உச்சரித்து பூஜை நிகழ்த்தும் போது யாரோ வீட்டுக்கதவை தட்டுவதை உணர்ந்தார். கதவை திறந்த போது வந்திருந்த மூவரும் தியாகராஜரின் பூஜை அறைக்கு சென்று ஸ்ரீராம பட்டாபிஷேக காட்சியை தந்து மறைந்தனர்.

கோவூர் சென்ற பொழுது சுந்தரேசக் கடவுளின் பேரில் "கோவூர் பஞ்சரத்தினத்தை" இயற்றினார். பஞ்சரத்தினத்தின் கீரத்தனைகளையும் (நாட்டை, கௌளை, ஆரபி, வராளி, ஸ்ரீராகம்) என்பவற்றில் இயற்றியுள்ளார். தனது எண்பதாவது வயதில் ஒரு நாள் தன் சீடர்களை அழைத்து பாடும்படி சொன்னார். அதுவே தன்கு கடைசி நாள் என்பதை உணர்ந்து தன்யாசி இராகத்தில் "சியாம சுந்தராங்க" என்ற கீர்த்தனையை பாடினார். சில வினாடிகளில் 1867ஆம் ஆண்டு தைமாதம் 6ம் நாள் இறைபதம் எய்தினார். இன்றும் இவர் பெயரால் தியாகராஜர் அன்னதான சபை இசையுலகு சிறப்பாக கொண்டாடி வருகின்றது போற்றத்தகு விடையமாகும்.

### முத்து சுவாமி தீட்சிதர்.

இவர் கிபி 1776 ம் ஆண்டு பங்குனி மாதம் 24ம் நாள் இராம சுவாமி தீட்சிதரின் மகனாக அவதரித்தார். சிறுவயதிலேயே சமஸ்கிருதம் தெலுங்கு ஆகிய மொழிகளில் பாண்டித்தியம் பெற்றார்.

சிதம்பர நாத யோகி என்ற பெரியார் முத்துசுவாமி தீட்சிதர் மீது விருப்பம் கொண்டு அவரை தன் சீடனாக ஏற்று காசிக்கு அழைத்துச் சென்றார். அங்கு ஹிந்துஸ்தானிய இசையை பயின்றார். சிதம்பர

நாதயோகி இறந்ததும் மீண்டும் மணலிக்கு திரும்பினார். தீட்சிதர் திருத்தணிக்கு சென்ற போது அங்கு எழுந்தருளியுள்ள சுப்பிரமணிய சுவாமிகள் அவர் கனவில் தோன்றி ஒரு கற்கண்டை போட்டு விட்டு மறைந்தார். அப்போது தீட்சிதர் "ஸ்ரீநாதி குருகுஹ" என்ற க்ருதியை முதன் முதலாக பாடினார். இவர் தனது பாடல்களில் "குருகுஹ" எனும் முத்திரையை கையாண்டுள்ளார்.

இவரது சகோதரர்களான பாலுசாமி தீட்சிதரும், சின்னசுவாமி தீட்சிதரும் இவரது உருப்படிகளை பல இடங்களிலும் பாடி பிரபல்யப்படுத்தினர். முத்து சுவாமி தீட்சிகர் தன் சகோதரனான பாலசுவாமி தீட்சிதரை காண எட்டயபுரம் புறப்பட்ட போது வழியில் குடிப்பதற்கு கூட நீர் கிடைக்காத அளவிற்கு வறட்சி இருப்பதை உணர்ந்து "ஆனந்தாம்ருதவர்ஷினி" என்ற க்ருதியை அமிர்தவர்சினி இராகத்தில் பாட திரண்டு மழை பொழிந்தது.

இவரது பாடல்கள் பொருள்வளம் நிரம்பி காணப்படுகிறது. மீண்டும் ஒரு முறை எட்டயபுரம் சென்று அங்கு தங்கியிருந்த போது பட்டத்து யானை மதம் பிடித்து அலைந்தது. சுடுகாட்டிற்கு சென்றது. இதை அபசகுணமாக எண்ணி பிரபலமான ஒருவர் மரணிக்கப்போவதை மக்கள் உணர்ந்தனர். அவ்வாறே 1835 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் இருபத்தோராம் நாள் இறைபதம் எய்தினார்.

இவ்வாறாக சங்கீத மும்மூரத்திகள் காலத்தில் இசை உன்னத இடத்தை பெற்றிருந்தது. இவர்கள் இறையருள் பெற்றவராக திகழ்ந்தனர். ஏராளமான உருப்படிகளை இயற்றினார். வெவ்வேறு மொழிகளில் பாண்டித்தியம் பெற்று விளங்கினார். வறட்சி வறுமை என்பவற்றில் இருந்து மக்களுக்கு நல்வாழ்வு அளித்தனர். எனவே இவர்கள் வாழ்ந்த காலப்பகுதி பொற்காலம் என சிறப்பிக்கப்படுவது சாலப் பொருத்தமானதாகும்.

திரு. குகேந்திரன் அனுசன்
இசை ஆசிரியர்

## சமயத்தின் ஒழுக்க விழுமியங்கள்

"மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்" எனக்கூறுவது சைவ சமயம். இது வெறும் வார்த்தைகளல்ல. எத்தனையோ பிறவிகளின் பேறாக ஒருவனுக்கு மனிதப்பிறவி கிடைக்கிறது. அம் மனிதப்பிறவி பயன்பெற வாழ்ந்து காட்டியவர்கள் எமது முன்னோரே. இதனை எமது சமயம் ஆங்காங்கு கூறுகிறது. சமயத் திருநூல்களான வேதம், ஆகமம், தர்மசாஸ்திரம் எல்லாம் சமயத்தின் ஒழுக்க விழுமியங்களை கூறுகின்றன.

உயிர்களிடத்து அன்பு செய்தல், அறம் செய்தல், இரக்கம் காட்டுதல், பணிவு, இன்சொல், பெரியோரை மதித்தல், குருவை மதித்தல் எனப் பல்வேறு விழுமியங்களை எமது சமயம் உள்ளடக்கியுள்ளது.

வள்ளுவர் கூறும் விழுமியங்களுள் முக்கியமாக கொல்லாமையையே எடுத்துக் காட்டுகிறார். கொல்லாமை என்பது ஓர் உயர்ந்த அறமாகும். ஒருவன் கொலை செய்வானாயின் அவன் செய்த புண்ணியம் அனைத்தையும் இழக்கிறான். கொலைசெய்வபன் மீளா நரகத்தில் வீழ்வான் என்கிறது கருட புராணம்.

நாம் கடைப்பிடிக்க வேண்டிய இன்னோர் அறமாக வாய்மையைக் குறிப்பிடலாம். வாய்மைக்கு வள்ளுவர்.

'வாய்மை எனப்படுவது யாதெனில்~ யாதொன்றும்
தீமை யில்லா சொலல்'

என வரைவிலக்கணம் கொடுக்கிறார். வாய்மையால் உயர்ந்தவர்கள் அரிச்சந்திரன், மற்றும் மஹாத்மா காந்தி ஆவார். வாய்மையின் சிறப்பை அறியாது சிலர் வாழ்கின்றனர். சைவசமயம் ஒழுங்குபடுத்தப்பட்ட கலாசார மரபுரிமையைப் பேணக்கூடிய ஒழுக்கம் சார்ந்து அறவாழ்க்கையை போதிக்கிறது.

ஒழுக்க விழுமியங்கள் எம்மை பரமாத்மாவுடன் இணைப்பவை. இவ்வொழுக்க விழுமியங்களை வேதங்கள், புராணங்கள், இதிகாசங்கள் கூறுகின்றன. மிக முக்கியமாக இருக்கு வேதம் கூறும் உபநிடதம் உயர்ந்த விழுமியத்தை "மாத்ரு தேவோ பவ", "பித்ரு தேவோ பவ", "ஆச்சார்ய தேவோ பவ", "அதித தேவோ பவ" என்ற வேதாந்த கருத்து மூலம் அறியலாம்.

சமயம் கூறும் ஒழுக்க விழுமியங்களில் பகிர்ந்துண்ணல் ஓர் முக்கியமான அறமாகும். இதனை வள்ளுவர்

"பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை"

என்று கூறினார். அத்துடன் மனித நேயப்பண்பும் முக்கிய அறமாகும். இன்று மனித நேயப்பண்பு நம்மிடையே குறைந்து கொண்டு வருகிறது. இதனால் கொலை, கொள்ளை போன்ற மாபாதகங்கள் அரங்கேறுகின்றன.

உலகத்தை வெல்லக் கூடிய ஆயுதமான அன்பு எல்லோரிடத்திலும் இருக்க வேண்டிய அறமாகும். அன்பு பல பெயர்களால் வளங்கப்படுகின்றன. அதாவது பாசம், காதல், நட்பு எனக் கூறுவர். இவை சந்தர்ப்பத்திற்கேற்ப மாறுபடும். தன் என்பைக்கூட பிறருக்கு ஈர்ந்தளிக்கக் கூடிய மனம் அன்பின் இருப்பிடமாகும்.

நீதி தவறாமையும் ஓர் உயர்ந்த அறமாகும். மனுநீதி கண்ட சோழன் தன் மகனையே தேர்காலில் இட்டுக் கொன்று நீதியைக் காத்தது யாவரும் மறக்க முடியாததொரு உண்மை. அத்துடன் பிறர் நலம் பேணுதலில் சிபியின் தொண்டு அளப்பெரியது. ஒரு சிறிய புறாவுக்காக தன்னையே கொடுத்தான்.

இது போன்ற சமய விழுமயங்களை எமது முன்னோர்கள் காட்டி வைத்துள்ளனர். இவற்றை கடைப்பிடிக்க வாழ்வில் நாம் முன்வர வேண்டும்.

இ. சங்கீர்த்தனன்
ஆண்டு:-10

# ஆலய வழிபாடு

"ஆலயம் தொழுவது சாலவும் நன்று" மானிடராகப் பிறந்த ஒவ்வொருவரும் ஏதோவொரு சமயத்தைப் பின்பற்றியே வாழ்கின்றார்கள். அச்சமயம் அவர்களை நெறிப்படுத்துவதற்காகவே அமைக்கப்பட்டுள்ளது. அந்த வகையில் நாம் இந்து சமயத்தை கடைப்பிடிப்பவர்களாக இருக்கின்றோம். ஆதலால் இந்துசமய அனுட்டானங்களை முறையாக பின்பற்றி ஒழுகிவரின் எமது வாழ்வில் சிறந்த நற்பிரஜையாக வாழமுடியும். எமது பிறவியானது முப்பிறப்பிலே செய்த புண்ணிய பாவங்களின் பயனாக கிடைத்துள்ளது. எம்மை தந்தையும் தாயும் உருவாக்கிவிட்டார்கள். ஆதலால் நாம் பெற்றோரை இருகண்கள் போல பாதுகாக்க வேண்டும். அதேபோல் எம்முடைய பிறவியில் தந்தை போல் இருப்பது சமயம். தாய்போல் இருப்பது பண்பாடு இவ்விரண்டையும் எமது கண்கள் போல பேணிப்பாதுகாப்பது அவசியமாகும்.

சைவசமயத்தவர்கள் தம்முடைய பிறவியின் பயனை தாமே அனுபவிப்பதற்காக இவ்வுலகிலே தோற்றுவிக்கப்பட்டவர்கள். பின்னர் சிறிது காலம் வாழ்கிறார்கள்.இறுதியில் தோன்றிய இடத்திலேயே மறைக்கப்படுகிறார்கள். இதனை சைவ சித்தாந்த கொள்கை முதல் சிவஞான போத சூத்திரம் வரை விளக்கி நிற்கின்றது.

"அவன் அவள் அதுவெனும் அவை மூவினையினையும் தோற்றிய திதியே ஒடுங்கி மலத்து உளதாய அந்தம் ஆதி என்மனார் புலவர்" என்று அழகாக சிவஞான போதம் விளக்கமளிக்கின்றது. இதன்படி தோன்றிய மக்கள் தங்களுடைய வாழ்வைச் செம்மைப்படுத்த சமய அனுட்டானங்களை முறைப்படி பேணுவதால் நாம் சிறந்த வீடு பேற்றை அடையமுடியும். இந்த வகையில் நாவலர் பெருமான் கூறிய "இந்த சரீரம் நமக்கு கிடைத்தது நாம் இறைவனை வழிபட்டு முத்தி இன்பம் பெறுதற் பொருட்டேயாம்". என்ற கூற்றிற்கிணங்க இறைவழிபாடு எமக்கு முக்கியம் நாம் அதிகாலையில் சூரியன் உதிப்பதற்கு முன் எழுந்து கூட்டிப் பெருக்கி குளிந்து இறைவனை பூவும் நீரும் கொண்டு வழிபாடு ஆற்ற வேண்டுமென்பது சைவர்களின் கொள்கையாகும். அதன் பின் எமது அன்றாட கடமைகளை ஆற்ற யல வேண்டும். ஆனால் இன்று எத்தனை பேர்சைவ அனுட்டானங்களை முறைப்படி நிறைவேற்றுகிறார்கள் என்பது கேள்விக்குறியே ஆனால் எம்மவர் விரதங்களை நேர்க்கின்றார்கள்.

அதில் பயன் தெரிந்து நோக்குவோர் எத்தனை பேர். பக்தியோடு நோக்குவோர் எத்தனைபேர். தெரியாமல் செய்யும் தவற்றை தெரியவைப்பதற்காகவே அறுபத்து மூன்று நாயன்மார்களும், சித்தர்களும், ஞானியர்களும் வாழ்ந்து காட்டினார்கள். அவர்களது வாழ்க்கையை ஒரு பாடமாக கொள்ள வேண்டும். எம்மவர்கள் எமது சமய உண்மைகளை மறந்து வாழும் காலத்தில் ஏனைய சமயத்தவர்கள் எமது அறநீதிக் கருத்துக்களை ஏற்று செயற்பட்டு வருவதை கண்ணூடாக காணமுடிகிறது.

சைவசமயி ஒருவனுக்கு இருக்க வேண்டிய கடமையில் ஒன்று தீட்சை பெறுதலாகும். இதில் எத்தனை பேர் இளமையில் பெறவேண்டிய தீட்சையை மரணித்த பின் தீட்சையை வைத்து அபரக்கிரியை ஆற்ற முடிவதை இன்று காணமுடிகிறது. இதை விடுத்து சிறு பராயத்திலேயே

சைவசமயிக்குரிய தீட்சை பெற்று சைவசமயிக்குரிய அனுட்டானங்களை அனுஷ்டிப்பின் நாம்பிறந்த பயனை அறியமுடியும். இதை விடுத்து நாம் எல்லோரும் இறைவனை நினைத்த விரதம் பிடிப்பதாக சொல்லிக்கொள்கிறோம். குளித்து தோய்ந்து வஸ்திரம் தரித்து ஆலயம் சென்று வழிபட்டால் போதாது. முறைப்படி ஸ்ஞானம் செய்து சிவதீட்சை வைத்து உரிய முறைப்படி ஆலயத்திற்கு காலால் நடந்து சென்று பூஜைப்பிரார்த்தனையை உரிய முறையில் கண்டு களித்து பயன் அடைய வேண்டும். ஆனால் உரிய அனுட்டானம் இல்லாமலும் அதனை ஏன் எப்படி பிடிக்க வேண்டும் என்ற உண்மைப்பொருள் எதுவென உணராமலும் அனுஷ்டிக்க கற்றுக்கொள்கிறார்கள். இந்த நிலை மாறி விரதத்தையும் ஆலய வழிபாட்டையும் சிறந்த முறையில் பின்பற்ற கற்றுக்கொள்ள வேண்டும். ஆலயத்திற்கு தேவையான மலர்களை எவ்வாறு எடுக்க வேண்டும் என நாயன்மார்களும் வியாக்கிரமபாதர், பதஞ்சலி போன்ற முனிவர்கள் காட்டிய வழியில் இறைவனுக்கு மலர் சாத்தி வழிபாடு இயற்றுதல் வேண்டும்.

ஆலயத்திற்கு சென்று இறைவனை வழிபடுகின்ற முறையினை நாம் நோக்குவோமானால் உடற்றூய்மையும் உளத்தூய்மையையும் பேணி ஆலயத்திற்கு சென்று ஆலய கேணியில் அல்லது ளத்தில் சென்று கை,கால் கழுவி ஆசனம் பண்ணி தூலலிங்கமாகிய கோபுரத்தை வணங்கி துவாரபாலகரிடம் விடைபெற்று இறை நாமத்தை உச்சரித்து ஆலயத்திற்குச் செல்ல வேண்டும் அங்கே கொடித்தம்பத்தையும் பலிபீடத்தையும் நந்தியையும் வணங்கி ஆண்கள் அட்டாங்க நமஸ்காரமும் பெண்கள் பஞ்சாங்க நமஸ்காரமும் செய்தல் வேண்டும்.

பின்னர் கைகளை குவித்து வணங்கி தீரவைந்தெழுத்தை உச்சரித்து வீதியை சுற்றி வருதல் சால சிறந்தது. ஆலயத்தில் முதலில் விநாயகரை தரிசித்து பின் சிவலிங்க பெருமான் உமாதேவியார் போன்றோரை தரிசித்துக் கொள்ள வேண்டும். பின்னர் ஏனைய பரிவார மூர்த்திகளையும் வணங்க வேண்டும். இறுதியாக சண்டேஸ்வரரையும் தரிசித்து சிவதரிசன பலனை தருமாறு தோத்திரம் செய்து மும்முறைகொட்டி பிரார்த்தித்து வலப்பக்கமாக வந்து சிவசந்நிதியை அடைந்து இடப தேவரின் கொம்பின் நடுவாக பின் சிவலிங்கப் பெருமானை தரிசித்து பலிபீடத்தின் முன் வீழ்ந்து வணங்கி ஓரிடத்தில் அமைதியாக இருந்து திருவைந்தெழுத்தை உச்சரித்து அமைதியாக வீட செல்ல வேண்டும்.

"உள்ளம் பெருங்கோயில் ஊனுடம் பாலயம்
வள்ளர் பிரானார்க்கு வாய் கோபுரவாசல்
தெள்ளத் தெளிந்தோர்க்கு சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்தும் களாமணி விளக்கே"

திருமதி.சிவசக்திசோமநாதன்
சித்தாந்தரத்தினம்.

## காரைக்கால் அம்மையார்

பெரியபுராணம் கூறும் பெண்ணடியார்களுள் ஒருவரே காரைக்கால் அம்மையார். இறைவனால் அம்மையே என அழைக்கும் பேறு பெற்றவர். நினைத்த மாத்திரத்தில் மாங்கனி பெற்றதும் பேய்வடிவு வேண்டிப் பெற்றதும் இவரது பக்தியை வெளிப்படுத்தும். இல்லறத்தில் இருந்து கொண்டே இறைநிலை அடைந்தவர்.

இவரது இயற்பெயர் புனிதவதியார். தேவாரம் பாடிய மூவர்க்கும் காலத்தால் முற்பட்டவர் தோத்திர வகையிலே புதிய பிரபந்தங்களை தொடக்கி வைத்த பெருமைக்குரியவர். பத்துப் பாடல் களால் துதிக்கும் பாமாலையான பதிக முறையை தோற்றிவைத்தவர் காரைக்கால் அம்மையார் ஆவார். இவரது பாடல்கள் யாவும் பல்லவர் காலப்பக்தி இயக்கத்திற்கு திருப்பு முனையாக அமைந்தவையாகும். இதனால் அடியார் வரிசையில் முக்கிய இடத்தை பெறுகிறார். அழகிய சொல்லாட்சியும், பொருளாளமும், பக்திச் சுவையும் நிரம்பிய பாடல்களை பாடினார். இவராற் பாடப்பட்ட அற்புத திருவந்தாதி, மூத்ததிருப்பதிகம், திருவாலங்காட்டு மூத்த திருப் பதிகம், திருவிரட்டை மணிமாலை என்பன அம்மையார் அருளிச் செய்த பிரபந்தங்களாகும். இவையாவும் 11ம் திருமுறையில் சேர்க்கப்பட்டுளள்ளன. இந்தியாவில் காரைக்கால் பட்டினம் வளங்கள் பல நிறைந்த துறைமுகம். வணிகர்களின் குடிகள் நெருங்கி வாழ்ந்தனர். அறநெறி தவறாத அவ்வணிகர்கள் குறைவில்லாத செல்வமும் சீர் சிறப்புமுடையவர்கள், அயல் நாட்டு வணிகர்கள் வருவதும் பொருள்கள் இறக்குவதும் ஏற்றுவது மான சிறப்பினை உடயது அப் பட்டினம். அந்நகரில் வாழ்கின்ற வணிகர்கட் கெல்லாம் தலைவனாக விளங்கியவன் தனதத்தன். நற்குணங்களுக்கு உறைவிடமானவர். மகப்பேறு இன்மையால் இறைவனை நோக்கி அவரும் அவரது மனைவியும் செய்த தவத்தின் பயனாக திருமடந்தை என வந்து அவதரித்தவரே காரைக்கால் அம்மையார். இவருக்கு புனிதவதியார் எனப்பெயரிட்டு அழைத்தனர். புனிதவதியார் தளர் நடைப்பருவத்தே பாம்பணியும் பரமன் இடத்தே தணியாத காதலுடன் சிவனுடைய நாமத்தையே உச்சரித்து வந்தார். அழகின் கொழுந்தனைய புனிதவதியார் விளையாடும் போதெல்லாம் சிவநாமமே உச்சரிப்பார். இதனை சேக்கிழார் பெருமான் “வண்டல் விளையாடும் போதெல்லாம்- அண்டர் பிரான் திருவார்த்தை” என்ற அடிகளால் விளக்கினார். தம்மிடம் வரும் சிவனடியார்களை வரவேற்பது அவருடைய இயல்பாக இருந்தது. சிறுமியாக இருந்த காலத்திலேயே தொண்டர்வரிற் தொழுது பணி செய்தலும், அமுதளித்தலுமாகிய சிவப்பணியை செய்து வந்தார்.

இவ்வாறாக புனிதவதியார் மங்கைப்பருவம் அடைந்தார். நாகை பட்டினத்தில் நீதிபதி என்ற தனவந்தர் இருந்தார். அவரது மகன் தனதத்தனுக்கு பெரியோர்கள் திருமணம் பேசினர். பரமதத்தனது குலங்கோத்திரம் ஒத்திருந்ததால் தனதத்தன் தனது மகளை திருமணம் செய்து கொடுக்க சம்மதித்தான். திருமணம் இனிது நிறைவேறியது.

தனதத்தன் புனிதவதியாரைப் பிரிந்திருக்க விரும்பாமல் காரைக்காலிலேயே ஒரு மாளிகையை சகலவசதி களோடும் கட்டிக் கொடுத்தான். புனிதவதியார் பரமதத்தனுடன் இல்லறத்தை நல்லறமாக நடாத்தி வந்தார். கணவனுக்கு அருந்துணையாக இருந்த அம்மையார் சிவபெருமானிடத்து மிகுந்த அன்பு கொண்டு விளங்கினார். சிவ பெருமானின் தொண்டர்கள்வரின் "செம்பொன்னும் நவமணியும் உணவும் கொடுத்து உபசரிப்பார். இவர் இறைவனிடத்தும் அடியவர்களிடத்தும் கொண்ட பக்தியைச் சேக்கிழார் சுவாமிகள் மிக அழகாக

'நம்பரடியார்க்கு நல்லதிரு அமுது அழித்தும்
செம் பொன்னும் நவமணியும் செழுந்துகிலும்
தமபரிவினாலவர்க்கு வேண்டுவன கொடுத்தும்'

என்றும் கூறுவர்.

சிவனடியாரை ஆதரிப்பதில் முன்னின்றவர் காரைக்கால் அம்மையார். இது அவரது விருந்தோம்பற் சிறப்பை, மஹேஸ்வரபூசைச் சிறப்பை எடுத்துக் காட்டுவது ஆகும். மேலும் இல்வாழ்க்கையில் ஈடுபட்டிருந் தாலும் இறைவனிடம் அவர் கொண்ட பக்தி அளவிறந்து என்பதை "பெருவிடையார் திருவடிக் கீழ் ஓங்கிய அன்புறு காதல் ஒழிவின்றி மிகப்பெருக" அவர் வாழ்ந்தார் என்று குறிப்பிடபடுகிறது.

ஒருநாள் பரமதத்தனைக்காண வணிகர் ஒருவர் இரு மாங்கனிகளைக் கொடுத்துச் சென்றார். பரமதத்தன் அவற்றை வீட்டுக்கு அனுப்பிவைத்தான். அப்பொழுது மூப்பும் பசியும் மிக்க ஒரு சிவனடியார் காரைக்கால் அம்மையார் வீட்டுக்கு வந்தார். அவரது அயர்வைக் கண்ட அம்மையார் அவரை உபசரித்து கணவன் அனுப்பிய மாங்கனிகளில் ஒன்றை அமுதுடன் கொடுத்து சிவனடியாரினது பசியினைப் போக்கினார். அவர் வாழ்த்திவிட்டுச் சென்றார். உச்சிப்பொழுதில் பரமதத்தன் வீட்டுக்கு வந்தான். அம்மையார் பரமதத்தனுக்கு உணவு பரிமாறினார். எஞ்சியுள்ள மாங்கனியையும் கொடுத்தார். அதனையுண்ட பரமதைத்தன் மற்றய மாங்கனையையும் தரும்படி கேட்டார். அம்மையார் கனிகொர்டு வருபவர் போல உள்ளே சென்றார். கனிக்கென் செய்வார். உமைபாகரை உளமுருகி வேண்டினார். அருட்கடலே அடியேனின் அல்லலை தீர்த்தருளுக என்றதும் கனி ஒன்று அவரது கையில் வந்தது. மகிழ்ச்சியுடன் கணவனிடம் கொடுத்து மகிழ்ந்தார். பரமதத்தனோ அதனை உண்டு இது அமுதினும் இனியது எங்கே பெற்றாய் என்றான். பொய்மை பேசக்கூடாது திருவருளின் திருநாமத்தை வெளிப்படுத்த முடியாது. தயங்கிப் பின் ஒருவாறு உண்மையைக் கூறிவிட்டார். திருவருளை அறியாத அவன் இன்னுமொரு மாங்கனியை திருவருளால் அழைத்து கொடு பார்ப்போம் என்றான். அவ்வாறே இறைவனை வேண்டி அழுதார். காரைக்கால் அம்மையார். கேட்ட மாத்திரத்தே மாங்கனி கையில் வந்தது. கொடுத்தார் கணவரிடம். கணவன் வாங்கியதும்" மாங்கனி மறைந்து விட்டது. பரமதத்தன் அஞ்சினார் நடுங்கினார்.

இவர் மானுட உடலோடு இருக்கிற தெய்வம் என்று எண்ணினான். அவரை பிரிந்து வாழ்ந்திடத்திட்டமிட்டு வாணிபத்திற்குச் செல்லுதல் போல் கப்பல் கட்டி கடல் கடந்து சென்றான். சென்றவன் நாகைப்பட்டினத்தில் தங்கினான். வேறுதிருமணம் செய்தான்.

தனமகளுக்கு புனிதவதி என்ற பெயரை இட்டான். சில நாட்கள் செல்ச உறவினர் காரைக்கால் அம்மையாரை பரமதத்தனிடம் அழைத்துச் சென்றனர். பரமதத்தன் தனது புதிய மனைவியோடும் வந்து காரைக்கால் அம்மையாரின் பாதங்களில் வீழ்ந்து வணங்கினான். அங்குள்ளவர்களை பார்த்து இவர் மானுடம் அல்லர். தெய்வப் பெண். இதனை அறிந்தே விட்டு வந்தேன். நீங்களும் வணங்குங்கள் என்றான். எல்லோரும் அதிசயித்தனர். கணவனது மனனிலை அறிந்த அம்மையார் உடல் வனப்பு நீங்கிப் பேய்வடிவம் தருமாறு இறைவனை வேண்டினார். "ஆன அப்பொழுது மன்றுன் ஆடுவார் அருளினாலே ஊனுடல் வனப்பு எல்லாம் உதறி எற்புடம் பேயாக வானமும் நிலமும் எல்லாம் வணங்கும் பேய் வடிவமானார். இவ்வடிவத்தைக் கண்டோர் அஞ்சி ஓடினர். திருக்கைலையை தலையால் நடந்து சென்றார். அவ்வுருவத்தைக் கண்ட உமை யாரென்றலும் சிவபெருமான் நம்மைப் பேணும் அம்மை காண் என்றார். இங்கு வேண்டுவது என் என்று எம் பெருமான் வினாவி வேண்டினார் காரைக்காலம்மையார்.

'இறவாத இன்ப அன்பு வேண்டிப் பின்வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல்-உன்னை
என்றும் மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும்
அறவா நீ ஆடும் போது உன்னடியின் கீழ் இருக்க.

என்றார். இறைவனும் அதற்கிசைந்து திருவாலங் காட்டில் நமது திரு நடனத்தைக் கண்டு இன்புற்றிருப்பாயாக என்றார். அம்மையார் திருவாலங்காடு சென்று எம் பெருமானுடைய திரு நடனத்தைத் தரிசித்து இன்புற்றார். மூத்ததிருப் பதிகங்களையும் பாடி அருளினார்.

ற. சுகிர்தா
ஆண்டு -12

## திருவள்ளுவரும் திருக்குறளும்

திருவள்ளுவர் சிறந்த ஒரு புலவர்.
இவருக்கு தெய்வப்புலவர் பொய்யாமொழிப்புலவர், செந்நாப்போதர் எனப் பல பெயர்கள் உள்ளன.
திருக்குறளை இயற்றியவர் திருவள்ளுவர்.
திருக்குறளுக்கு உலகப்பொதுமறை, முப்பாநூல், உத்தரவேதம் எனப்பல பெயர்கள் உள்ளன.
திருக்குறளில் 133 அதிகாரங்கள் உள்ளன.
ஒவ்வொரு அதிகாரமும் பத்துக் குறள் வெண்பாக்களால் ஆனவை.
மொத்தமாக 1330 குறள் வெண் பாக்கள் திருக்குறளில் உள்ளன.
நாம் வாழ்வதற்குரிய நெறிகளை திருக்குறள் கூறுகின்றது.
இது ஒரு அறநூல் ஆகும்.
எல்லாசமயத்தவரும் எல்லா இனத்த வரும் திருக்குறளை விரும்பிக்கற்கின்றனர்.

க.ஆரண்யன்
ஆண்டு:-2

## சிவபெருமான்

சிவபெருமான் முழுமுதற் கடவுள் அவரது வாகனம் இடபம். சிவபெருமானின் சக்தி உமா தேவியார். சிவபெருமான் உலகத்தை காப்பவர். அழிப்பவரும் அவரே.சிவபெருமானின் திருக்குமாரர்கள் பிள்ளையார், முருகன். அவருடைய தலையில் இருப்பது கங்கை, பாம்பு, சந்திரன். அவரில்லாத இடம் இல்லை. இவரது மறுபெயர்கள் சோமஸ்கந்தர், பிறைசூடி, கங்காதரன், நீலகண்டன் என்பவையாகும். சிவபெருமானுக்கு உரிய விரதங்கள் சிவராத்திரி, பிரதோசம், திருவாதிரை, சோமாவாரம், என்பனவாகும். சிவபெருமான் பன்றியாக வந்து குட்டிகளுக்கு பால் கொடுத்தார். திருஞானசம்பத்தருக்கு பால் கொடுத்தார். செம்மனச்செல்வி அம்மையாருக்கு பிட்டுக்கு மண்சுமந்து பிரம்படிபட்டார். அரக்கர்களுடைய மூன்று கோட்டைகளையம் எரித்து சாம்பலாக்கினார். சிவபெருமானின் நெற்றிக் கண்ணிலிருந்து முருகன் தோண்றினார். நாம்செய்யும் கருமங்களை அவதானித்துக் கொண்டிருப்பார். சிவபெருமான் அவரை வணங்குவோம்.

லோஜனன்
தரம்:-2

## முருகன்

சைவசமயத்தின் முதற்கடவுள் சிவபெருமான். இவருக்கு இரண்டு மைந்தர்கள் உள்ளனர். ஒருவர் முருகன், மற்றவர் விநாயகர் முருகன் அழகானவர் அழகுத்தெய்வம் முருகனை வழிபடும் சமயம் கௌமாரம் எனப்படும்.

இவருக்குச் சுவாமிநாதன். மயில்வாகனன், சரவணன். கார்த்திகேயன். ஆறுமுகன் எனப்பெயர்கள் உள்ளன. தந்தைக்கு உபதேசம் செய்தமையால் சுவாமிநாதன் என்ற பெயரும் உண்டு. சூரனை வென்றவன் முருகன். இவனது வாகனம் மயில் ஆகும். சேவற்கொடியைக் கையில் ஏந்தியுள்ளான். வேலாயுதத்தை கையில் வைத்திருக்கின்றான். வள்ளி அம்மனும், தெய்வானை அம்மனும் இவனது சக்திகளாவர். ஆறுபடைவீடுகளில் இவன் விரும்பி உறைவான். இலங்கையில் நல்லூர், மாவிட்டபுரம். செல்வச்சந்நதி, கதிர்காமம், மண்டூர் ஆகிய இடங்களில் கோயில் கொண்டுள்ளான். அருணகிரிநாதர் முருகன்மேல் திருப்புகழ் பாடயுள்ளார். நக்கீரரும் பாடியுள்ளார். கந்தசஷ்டி, திருக்கார்த்திகை, வெள்ளிக்கிழமை ஆகியன முருகனுக்கு உரிய விரதநாட்களாகும். சிவபெருமானின் நெற்றிக்கண்ணில் இருந்து தோன்றியவன் முருகன். கார்த்திகைப் பெண்களால் வளர்க்கப்பட்டவன். முருகனை வழிபட்டு உய்வோமாக.

ஜெ. மதுராங்கன்
ஆண்டு 3

## அறுகம்புல்லின் சிறப்பு

பிள்ளையார் ஒருமுறை அக்கினி வடிவம் கொண்ட அசுரனுடன் சண்டை செய்த போது அவனைப் பிடித்து விழுங்கிவிட்டார். பிள்ளையாருக்கு வயிற்றின் வெப்பம் தாங்க முடியவில்லை. இதனால் வேதனையுற்றபோது தேவர்கள், முனிவர்கள் அவருடைய வெப்பத்தை தணிப்பதற்காக பலவழிகழில் முயன்றும் முடியவில்லை. இறுதியில் அறுகம்புல்லால் அர்ச்சனை செய்தார்கள். அதன் பின் வெப்பம் தணிந்தது. இதனால் பிள்ளையாருக்கு அறுகம்புல் வைத்து அர்ச்சிப்பது வழக்கமாகியது.

ஒருமுறை பிள்ளையாரை நினைத்து வழிபடும் பக்தருடைய மனைவி பொன் பொருளுக்கு ஆசைப்பட்டார். எனவே பிள்ளையார் பூசையில் வழிபட்ட அறுகம்புல்லை எடுத்துக்கொடுத்தார்.இதனை தேவலோகம் எடுத்துச்சென்று சமனான பொருள் கேட்டுவாங்கு என்றார். அதன்படி அங்கு சென்று தேவேந்திரனிடம் கேட்டபோது அதற்கு தேவேந்திரன் சம்மதித்தான். தராசின் ஒரு பக்கத்தில் அறுகம்புல்லும் மறுபக்கத்தில் ஆபரணங்களும் உள்ள சகல பொருள்களை இட்டும் தராசு சமப்படவில்லை. தேவேந்திரன் முனிவர் பத்தினியிடம் மன்னிப்புக்கேட்டான்

இதிலிருந்து நாம் விளங்குவதுயாது எனில் பூசையில் இட்ட அறுகம் புல் பொன்பொருளை விட உயர்ந்தது என்பதே.

ஜெனனி
தரம்:-5

## விநாயகரைக் குட்டிக் கும்பிடுவோம்.

நாம் எந்தக் காரியத்தை தொடங்கும் முன்பும் விநாயகரை வழிபட்டுத்தான் தொடங்க வேண்டும். எமக்கு வெற்றியையும் சித்தியையும் தருபவர் விநாயகரே. இதற்கு உதாரணமாக ஒரு கதையை கூறலாம். முன்னொருகாலத்தில் மழைகிடைக்காமல் நிலங்கள் எல்லாம் வரண்டு காணப்பட்டது. இதனால் இந்திரன் மழை கிடைக்கும் படி விநாயகரை நோக்கி வழிபட்டான். அகத்திய முனிவர் தனது கமண்டலத்தில் காவிர் ஆற்றை அடக்கி வைத்திருந்தார். பின்னர் அவர் ஓரிடத்தில் அமர்ந்திருந்து கமண்டலத்தை அருகில் வைத்துக்கொண்டு தவம் செய்துகொண்டிருந்தார். விநாயகர் ஒரு காக வடிவமாக பறந்து வந்து திரிந்து அகத்தியரின் கமண்டலத்தை வீழ்த்தினார். கோபம் கொண்ட அகத்திய முனிவர் காகத்தை பின் தொடர்ந்து வந்தார். உடனே அக்காகம் சிறுவனுருவாக மாறியது. பின் அகத்திய முனிவர் சிறுவனது தலையில் குட்ட வந்தார். அச்சிறுவன் உடனே தன்னுடைய உண்மையான சுய உருவத்தை காட்டி மாறினார். அகத்தியர் அதை பார்த்தவுடன் விநாயகருக்கு குட்டவந்த கையை தன் தலையிலேயே குட்டி வீழ்ந்து வணங்கினார். அப்பொழுது அந்தக் காவிரி ஆறு ஊரெல்லாம் பரவியது. அங்கிருந்த தாவரம், செடி, கொடி, வயல்வெளிகள் எல்லாம் செழிப்படைந்து காணப்பட்டன. அவையெல்லாம் பச்சைப்பசேலென காட்சி தந்தது. இக்கதையிலிருந்து விநாயகரை வணங்கும் போது எங்களுடைய தலையிலே மூன்று முறை குட்டி தோப்புக்கரணம் போட்டு வழிபடும் வழக்கம் உருவாகியது.

த.விதுசனா
தரம்:-6

# சிவராத்திரி

சைவ சமய மக்கள் சிவபெருமானை நினைத்து வழிபடும் விரதங்களில் முதன்மையானது சிவராத்திரி விரதமாகும்.

உயிர்கள் ஒடுங்கி நிற்கும் காலம் இராத்திரி எனப்பட்டது. சர்வ ஆன்மாக்களும் தமது வினைகளை நீக்கி யமவேதனை போக்கி எம்பெருமானுடன் ஐக்கியமாவது சிவராத்திரி எனப்பட்டது. சிவராத்திரி பற்றி சிவமகாபுராணம் போன்ற நூல்கள் விரிவாக விளக்கிக் கூறுகின்றன. புராணங்களிலும் இதிகாசங்களிலும் கூறப்பட்டவற்றை ஆறுமுகநாவலர் தமது சைவ வினாவிடை எனும் நூலில் விளக்கமாக கூறியுள்ளார்.

மாயை என்னும் இருளிலிருந்து ஆன்மா விழிப்பு நிலையில் இருக்கும் நாள் சிவராத்திரி தினமாகும். மாசி மாதத்து அபரபக்கச் சதுர்த்தசியில் சிவராத்திரி விரதம் அனுட்டிக்கப்படுகின்றது. சிவராத்திரி விரதத்தின் மகிமையை சிவன் உமாதேவியாருக்கும் திருநந்தி தேவருக்கும் உபதேசிக்க திருநந்தி தேவர் தேவர்களுக்கும் சூத புராணிகருக்கும் முனிவர்களுக்கும் உபதேசித்ததாக புராணங்கள் கூறுகின்றன.

கௌதமர், வசிட்டர், அகஸ்தியர் போன்ற சப்தரிஷிகளும் சிவராத்திரி தினத்தன்று சிவத்தியானத்தில் ஆழ்ந்திருந்து வழிபட்டதாகவும் சூரியன் சந்திரன், அக்கினிகுபேரன் மன்மதன், விஷ்ணு பிரம்மா ஆகியோர் சிவராத்திரி விரதத்தை அனுட்டித்து தத்தமக்கு வேண்டிய வரங்களைப் பெற்றுக் கொண்டனர்.

சிவராத்திரி விரதம் - நித்தியசிவராத்திரி, பட்சசிவராத்திரி, மகாசிவராத்திரி, யோகசிவராத்திரி, மகாசிவராத்திரி என்ற ஐந்திலும் மகாசிவராத்திரியே பலராலும் போற்றி கைக் கொள்ளப்பட்டுவருகிறது. அருவுருவமாகிய லிங்க வடிவத்திலிருந்து உருவம் தாங்கிய லிங்கோற்பவராக இறைவன் தோன்றி அருள்புரிந்த காலம் லிங்கோற்பவ காலம் ஆகும். லிங்கோற்பவ காலம் இரவு 11.30 முதல் 12.30 மணி வரையுள்ள காலமாகும். சிவாலயத்தின் கருவறையின் பின்புற மாடத்தில் லிங்கோற்பவர் அமர்ந்திருப்பார். லிங்கோற்பவ வடிவத்தின் கீழ் பன்றி வடிவில் திருமாலும் உச்சியில் அன்ன வடிவில் பிரம்ம தேவரும் அடிமுடி தேடும் நிலையில் காணப்படுகின்றனர். இங்கு இறைவன் ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும் மூர்த்தியாக விளங்குகிறார். எம்பெருமானின் பாதமும் உச்சியும் காட்டப்படுவதில்லை.

ஆதிகாலத்தில் ஒரு நாள் பார்வதி இறைவன் கண்களை விளையாட்டாக பொத்திய பொழுது பிரபஞ்சம் முழுவதும் இருள் சூழ்ந்து விளங்க தேவர்கள் பயந்து இறைவனைத் துதிக்க மீள ஒளி பெற்ற இரவு தான் சிவராத்திரி என்றும் கூறுவார்.

தேவர்களும், அசுரர்களும் அமுதம் பெற திருப் பாற்கடலைக் கடைந்த பொழுது எழுந்த ஆலகால விஷத்தை உண்டு நீல கண்டனாக அருள் பரிந்த தினமே சிவராத்திரி என்றும் கூறுவார்.

செ. விதுர்சிகா
ஆண்டு:-6A

# திருக்குறளும் செய்நன்றியறிதலும்

திருவள்ளுவர் ஒரு சிறந்த புலவர் ஆவார். இவர் இந்தியாவில் மயிலாப்பூர் என்ற கிராமத்தில் ஆதிபகவனுக்கு மகனாகப் பிறந்தார். இவர் கி.மு 2ம் நூற்றாண்டு பிறந்தார். இவருக்கு தெய்வப்புலவர், பொய்யா மொழிப்புலவர், சென்னாப் புலவர் எனப் பல பெயர்களுண்டு. திருக்குறள் 133 அதிகாரங்களையும் 1330 குறட்பாக்களையும் கொண்டுள்ளது.

இது ஏழு சொற்களைக்கொண்ட ஈரடி வெண்பாவினால் ஆனது. வள்ளுவர் இயற்றிய குறள்களில் செய்நன்றி அறிதல் எனும் அதிகாரம் உண்டு. இது மக்கள் நன்றியுடையவர்களாக வாழ வேண்டும் என்பதை உணர்த்துகின்றது.

நாம் ஒருவருக்கு உதவி செய்யாத போதும் பிறர் எமக்குச் செய்த உதவிக்கு உலகத்தையும் வானத்தையும் கைமாறாகக் கொடுத்தாலும் போதாது என்கிறார். தேவை அறிந்து செய்த உதவியானது உலகத்தில் பெரியது என்றும் பயன் கருதாது செய்த உதவி கடலிலும் பெரியதும் என்கிறார். பிறர் எமக்குச் செய்த உதவி தினையளவாக இருந்தாலும் பனை அளவாகக் கொள்ள வேண்டும் என்கிறார். இதனை

'தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணை
யாகக்கொள்வார் பயன் தெரிவார்.'

என்னும் குறள் வெண்பாவில் காணலாம். நாம் பிறருக்குச் செய்த உதவி அவர்களுக்கு திருப்தியை தரவேண்டும் இல்லாவிட்டால் அந்த உதவி பயனற்றது என்பதை "உதவி செய்யப்பட்டார் சால்பின் வரைத்து என்று கூறுவார்" எனவே நாம் செய்கின்ற உதவி ஒவொன்று பயனுள்ளதாக இருக்க வேண்டும் என்றும் சுட்டிக் காட்டுகின்றார். நாம் துன்பப்படும் போது துன்பத்தில் உதவி செய்தவரை ஒரு காலமும் மறக்கக் கூடாது இதனை

'எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் தங்கண்
விழுமம் துடைத்தவர் நட்பு'

என்கிறார். எனவே ஒருவர் செய்த உதவியை ஒருகாலமும் மறக்கக் கூடாது. எமக்கு நன்றி செய்தவர்கள். தற்செயலாக ஒரு கொடுமையை செய்தாலும் அவர்கள் முன்பு செய்த நன்றியை நினைத்து அவர்களுக்கு தீங்கு செய்யக்கூடாது.

'கொன்றன்ன இன்னா செயினும் அவர்
செய்த ஒன்று நன்றல்லக் கெடும்'

என்ற குறள் வெண்பாவால் அறியலாம். ஏனைய பாவங்களுக்கும் பிராயச் சித்தம் உண்டு. ஆனால் செய்நன்றி மறந்த பாவத்திற்கு பிராயச்சித்தம் இல்லை என்கிறார். இதனை

'எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு'

என்னும் குறட்பா உணர்த்துகிறது. ஆகவே நாம் நன்றியுடையவர்களாக வாழப்பழகுதல் வேண்டும்.

சர்மிளா
ஆண்டு:-6

# வள்ளுவர் வாழ்க்கை நெறி

கம்பனைப்போல் வள்ளுவனைப்போல் இளங்கோவைப் போல் யாங்கணுமே பிறந்த தில்லை உண்மை வெறும் புகழ்ச்சியில்லை" என்ற பாரதியின் கூற்றுக்கு இயைவாக வள்ளுவரின் பெருமைகளை ஓரிரு வார்த்தைகளில் அடக்க முடியாது. அந்த அளவிற்கு பெருமைக்குரியவர் வள்ளுவப் பெருந்தகை.

"ஆதிக்கும் பகவனுக்கும் மகனாகப் பிறந்து சைவத்தைக் கடைப்பிடித்து வாழ்ந்தவர். இவர் சங்கமருவிய காலப் பகுதிக்குரியவர் வள்ளுவர். ஈரடியால் பாடல்களைத் தந்து பெரும்புகழ் ஈட்டினார். "வள்ளுவன் தனை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ் நாடு" எனறு பாரதி புகழ்ந்துரைத்தார்.

"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார் தோன்றலின் தோன்றாமை நன்று" என்று வள்ளுவன் சான்று காட்டி வாழ்ந்தவர். தானே தனக்கு வரம் பிட்டுக் கொண்டவர். இவர் திருமணம் புரிகின்ற போது வாசுகியிடம் ஒரு பிடி மணலைக் கொடுத்து இதை உண்ணும் கறிசோறாக ஆக்கினால் எனக்கு மனைவியாகும் பேறுண்டாகும் என்றார். உடனே தங்களின் அருளுண்டானால் இக்காரியம் நடந்தேறுமென்றார். அதன்படி வாசுகி நாயகியாகினார். வள்ளுவர் வாசுகியின் தந்தையாரிடம் எதையும் வாங்கவில்லை. பெண்ணை மட்டுமே பெற்றுக்கொண்டார். சீதனம் என்ற நிலையை வள்ளுவரே வெறுத்தார் போலும். சமூகத்திற்கு வாழ்க்கையின் பேற்றைக் காட்டுவதற்கு நெசவு நோற்கும் எளிய தொழிலைச் செய்தார். இவ்வாறு செய்யும் போது ஒரு பகல் வேளை நூற்கட்டை நிலத்தில் விழுந்து விட்டது. அதை எடுப்பதற்கு விளக்கு கொழுத்தி எடுக்கும் படி வேண்டினார். இதே போன்று மற்றுமொரு வேளை கிணற்றில் நீரெடுக்கும் போது அரைக்கிணற்றுக்கு வாழி வந்ததும் வள்ளுவன் வாசுகியை அழைக்கின்றார்.வாசுகி சென்றுவரும் வரை வாழி விட்ட இடத்திலேயே நின்றது இவ்வாறு வாழ்க்கையை நல்லறமாக ஓட்டிச் செல்கின்ற போது வாசுகி இறந்து விடுகிறாள். வாசுகியின் இறப்பை தாங்கமுடியாத வள்ளுவனார்.

'அடிசிற் கினியாளே! அன்புடையமாதே
படிசொற் தவறாத பாவாய்! – அடிவருடிப்
பின்தூங்கி முன்னெழும் பேதையே! போதியோ
என் தூங்கும் என்கண் இரா'

என்று பாடி வருந்தினார். வள்ளுவன் சிறிது காலம் வாழ்ந்து இறக்கின்ற போது தன்னுடைய மெய்ச்சீடனாகிய ஏலேலசிங்கரிடம் தன் உடலை இழுத்துச் சென்று காட்டிலே விடுமாறு கூறினார். அதன்படி செய்ய மனமின்றி சீடன் அவருடைய வெற்றுடலை பொன் பெட்டியிலே வைத்து அடக்கம் செய்ய முற்பட்ட போது உயிர்த்த வள்ளுவன் சீடனைப் பார்த்து யான் என்ன சொன்னேன் என்று கூறினார்.சீடன் அதிசயித்து அவரின் கட்டளைப்படியே செய்தான். அவருடைய வெற்றுடலை சாப்பிட்ட பறவைகள், நரிகள் யாவும் பொன்னிறமாக மாறியது என்று வரலாறு

சா. திவாபரன்
ஆண்டு:-7

# யோகர் சுவாமிகள்

யாழ்ப்பாணத்து சித்தர் பரம்புரையிலே தோன்றிய ஒருவர் யோகர் சுவாமிகள். இவரது குரு செல்லப்பா சுவாமிகள்.

இவர் 1872ம் ஆண்டு மாவிட்டபுரத்தில் பிறந்தார். இவரது இளமைப்பெயர் சதாசிவன். சதாசிவன் தன்சிறு வயதினிலே பெற்றோரை இழந்தான். மாமியாரின் ஆதரவில் வாழ்ந்து வந்தார். ஊரில் உள்ள தமிழ் பாடசாலையில் கல்வி கற்றான். சம்பந்தாசிரியர் கல்லூரியில் சேர்ந்து ஆங்கிலமும் கற்றுக் கொண்டார். அரச சேவை கிடைத்தது கிளிநொச்சியில் நீர்ப்பாசன அலுவலகத்தில் பொருட்பாதுகாப்பாளராக கடமை யாற்றினார்.

இயல்பாகவே இறைவனிடத்தில் பக்தி அதிகமாகக் கொண்டிருந்தார். ஓய்வுநேரங்களில் திருமுறை களையும், புராணங் களையும் படித்து வந்தார். ஆத்மீக சிந்தனையாளனாக விளங்கினார் தன் குருவைத்தேடினார். ஆத்மீக நாட்டம் கொண்ட சதா சிவனுக்கும் செல்லப்பாச் சுவாமிகள் குருவாக கிடைத்தார்.

யாழ்ப்பாண நல்லூரிலே தேரடியில் குரு உபதேசமும் தீட்சையும் பெற்றுக் கொண்டார். அன்றுமுதல் எல்லாப்பற்றையும் விட்டார். உத்தியோகத்தை விட்டார். உற்றார் உறவுகளை விட்டார். குருவே எல்லாம் என்று சரணடைந்தார். இதனைத் "தேரடியில் தேசிகனைக் கண்டு தரிசித்தேன்" என்றார். செல்லப்பா சுவாமிகளை விட்டுப்பிரியாதிருந்தார். அவரைப் பின்பற்றி நடந்தார்.

ஒரு முறை 40 நாட்கள் தேர்முட்டியில் இரவு பகலாக நிட்டை இருந்தார். குருவின் கட்டளைப்படி பிச்சை எடுத்து உண்டார். இதனைக்கண்ட மக்கள் இவரை யோகர் சுவாமிகள் என்று அழைத்தனர். செல்லப்பாச் சுவாமிகள் 4 மகா வாக்கியங்களை இவருக்கு உபதேசித்தார். ஒன்று முழுவதும் உண்மை, இரண்டாவது எப்பொழுதோ முடிந்த காரியம் மூன்றாவது ஒரு பொல்லாப்புமில்லை நான்காவது நாமறியோம் என்பவையாகும்.

யோகர் சுவாமிகள் 50 ஆண்டுகளே மக்களுக்கு நல்வழி காட்டி 1964ம் ஆண்டு பங்குனி 23ம் நாள் ஆயிலிய நட்சத்திரத்தில் சிவனடிசேர்ந்தார்.அவரது குருபூசைத்தினம் கொண்டாடப்பட்டு வருகிறது.

ஜெ. பபிசாலினி
தரம்:-7

## விருந்தோம்பல்

இல்லறத்திற்குரிய அறங்களில் விருந்தோம்பல் சிறந்த ஒரு அறமாகும். "தென்புலத்தார்" . தெய்வம் விருந்து என்றாங்கு ஐம்புலத்தாறோம்பல் தலை" என்று இல்லறத்தினுடைய கடமைகள் வரையறுக்கப்பட்டுள்ளது. வருந்தினரை உபசரித்தலும் இன்முகத்துடன் உபசரித்தல் முக்கிய கடமையாகும். கடுகடுத்த முகத்துடன் ஏனோதானோ என்று வீட்டிற்கு வந்துவிட்டார்களே என் செய்வது என்றும் செய்ய வேண்டிய நிற்பந்தத்தால் செய்வது விருந்தல்ல விருந்தினருடைய உள்ளம் அனிச்சம் பூவிலும் மென்மையானது அனிச்சம்பூ முகர்ந்தால் வாடிவிடும். இதனை வள்ளுவர் அழகாக கூறுவார். "மோப்பக் குழையும் அனுச்சம் முகத்திலிருந்து நோக்கக் குழையும் விருந்து." வீட்டிற்கு வரும் விருந்தினரை கணவன் மனைவி இருவரும் வரவேற்று அன்பு காட்டி உபசரித்தல் இன்றியமையாத அறமாகும்.

இளையான் குடி மாறர் என்னும் நாயனார் ஒருவர் இருந்தார். அவர சிறந்த சிவபக்தர். தினமும் வீட்டுக்கு வரும் சிவனடி யார்களை உபசரித்து உணவு கொடுத்து மகிழ்வார். அயலவரிடமும் கடன் வாங்கி தம் விருந்தோம்பல் பணியை நிறை வேற்றினார். வீட்டில் சமைப்பதற்கு என்று ஒன்றுமில்லை. அடுப்பு மூட்ட வில்லை. அடுப்பு பல நாட்களாக மூட்டாமையால் காளான் முளைத்துக்கிடந்தது. இளையான் குடி நாயனாரும் அவரது இனிய பத்தினியும் பசியால் வாடி வருந்தி செய்வதறியாது சிவாயநம என உச்சரித்துக் கொண்டு இருந்தனர். நேரமோ அர்த்தயாமம். மழையோ கொட்டுகொட்டென்று கொட்டியது. வெள்ளம் கரைபுரண்டு ஓடுகிறது. இளையான் குடி மாறனாருடைய விருந்தின் சிறப்பை உலகோருக்கு உணர்த்த விரும்பிய இறைவன் சிவனடியார் வேடத்தில் வந்து கதவை தட்டினார். "சிவாயநம" என்று கத்தினார். இளையான் குடி மாறர் ஓடிவந்து கதவைத்திறந்தார். சிவனடியாரோ "அன்ப பசித்து வந்தோம்" என்றார். மாறனார் பெருமகிழ்ச்சி அடைந்தார். அவரது மனைவியாரும் உறுதுணையாக இருந்தார். சிவனடியார் மழையில் நனைந்தவராதலினால் ஈரம் உலர்த்தி ஆசனத்தில் இருத்தி விட்டு மனைவியாரை நோக்கினார். திருவமுது கொடுக்க வேண்டும். அடுப்போ எத்தனையோ நாட்களாக எரிக்கவில்லை. வீட்டு சமையலுக்கு எதுவுமில்லை. இந்த நிலையில் மனைவி மாறனாரின் கவலையை போக்கி நேற்று விதைத்த நெல்மணிகள் இன்று வெள்ளத்தில் மிதந்திருக்கும் வாரி வாருங்கள் என்றார். மாறனாருக்கு மகிழ்ச்சி தாங்கவில்லை. அன்புள்ள மனையாளின் பண்பு அவர் தம்பணியை நிறைவேற்றியது. நனைந்த நெல்லுடன் வந்தார் மாறர். எரிப்பதற்கு விறகு இல்லை. மனைவியினுடைய ஆலோசனை படி வீட்டுக்கூரையை பிடுங்கி மனைவியிடம் கொடுத்தார். சிவனடியாருக்கு திருவமுது கொடுக்குமாறு கூறினார். அவருடைய மனைவி திருவமுதை சிவனடியாருக்கு கொடுக்க ஏற்பாடு செய்தார். சிவனடியாரை அழைக்கச்சென்றபோது அங்கிருந்த சிவனடியாரைக் காணவில்லை. சிறிது நேரத்தில் இடபாரூடராக காட்சியளித்தார். அவர்களுக்கு பேரின்பப் பெருவாழ்வு அளிக்கப்பட்டது.

மேலும் இல்லறத்தில் இருப்பவனுடைய முக்கிய கடமை கடமைகளில் ஒன்று தென்புலத்தார் விருந்து ஆகும். அதாவது நமது முன்னோர்கள் காலஞ்சென்ற பெற்றோர்கள் பிதிர்கள் உலகத்திலிருப்பார்கள். அவர் செய்த பாவ புண்ணியங்களுக்கு ஏற்ப மறுபிறப்பு காத்திருக்கும். இப்படிப்பட்ட பிதிர்கள் (ஆத்மா) சாந்திக்காகவும் அவர்களின் விமோசனத்திற்காகவும் அவர்களது புத்திரர்களால் செய்யப்படும் கருமம் ஆகிய ஆண்டுத்திதி (திவசம்) கொடுத்தல் ஆகும். இதனையும் ஒவ்வொரு இல்லத்தாரும் முக்கியமாக கடைப்பிடிக்க வேண்டும். இல்லாவிடின் சந்சுதி விமோசனம் கிடைக்காது.

செல்வி.ம.மோவிந்தா
ஆண்டு:-7

# சேக்கிழாரும் பெரியபுராணமும்

பெரிய புராணத்தை எழுதியவர் சேக்கிழார். இவருக்கு அருள்மொழித்தேவர், உத்தமசோழப்பல்லவன், தொண்டர்சீர்பரவுவார் என்றும் வேறு பெயர்கள் உள்ளன. இவர் தொண்டை நாட்டைச் சேர்ந்தவர். இரண்டாங் குலோத்துங்க சோழன் காலத்தவர். இவனை அனபாயச் சோழன் என்றும் அழைப்பர். அனபாயச் சோழ மன்னனுக்கு முதல் மந்திரியாக இருந்தவர் சேக்கிழார்.

அக்காலத்தில் தமிழிலே சிறந்த காப்பியங்கள் இன்மையால் அனபாயச்சோழ மன்னன் சமணகாப்பியமாகிய சீவகசிந்தாமணியைப் படித்து இன்புற்றான். இதனைக்கண்ட சேக்கிழார் மனம் வருந்தினார். சிறந்தகாப்பிய மொன்றை செய்துதர விரும்பினார். சிவனேயச் செல்வர்களின் வாழ்வையும், பெருமையையும், அனபாயச்சோழனுக்கு எடுத்துரைத்தார். மன்னன் மகிழ்ந்தான். பொன் பொருள் யாவற்றையும் கொடுத்து காப்பியம் ஒன்று செய்து தரும்படி வேண்டினான். சேக்கிழார் நேரே சிதம்பரம் சென்றார். எம் பெருமான் திருவருளை வேண்டி நின்றார். அம்பலத்தாடுவான் திரு வருளினாலே சிலம்பொலி கேட்டது. "உலகெலாம்" என்று அடியெடுத்து கொடுக்கப்பட்டது. இறைவன் தருவருளை வியந்து பெரிய புராணத்தை எழுதத்தொடங்கினார்.

சுந்தரமூர்த்திநாயனார் எழுதிய திருத்தொண்டர் தொகை யையும் நம்பியாண்டார் நம்பிஅருளிய திருத்தொண்டர் திருவந்தந்தாதி யையும் அடிப்படையாக கொண்டு ஆதாரமாக கொண்டு நூலை எழுதினார். அறுபத்து மூன்று தனியடியார்களையும், ஒன்பது தொகையடியார்களின் சிறப்பும் இங்கே கூறப்படுகின்றன. நூலை எழுதும் முன் அடியார்கள் வாழ்ந்த இடந்தோறும் சென்று அவர்களைப் பற்றிய உண்மைகளை ஆராய்ந்து பெற்றுக் கொண்டார். ஆக்கும் நூல் மன்னனின் உள்ளத்தைக் கவர வேண்டுமென்று எண்ணினார். சீவக சிந்தாமணியிலும் உயர்வு உடையதாய் இருத்தல் வேண்டும் என்பதை உணர்ந்தார். காப்பிய நாயகனாக சுந்தரரைக் கொண்டார். காப்பிய இலட்சணங்கள் பொருந்த தடுத்தாட்கொண்ட புராணத்தில் தொடங்கி வெள்ளானைச்சுருக்கத்தில் சுந்தரர் கைலையை அடைவதோடு நிறைவு பெறுகிறது. நாட்டுவளம், நகர வளம், காதல் , தூது, போர், அறம், பொருள், இன்பம் வீடு முதலியன பொருந்தும் படி காப்பியம் அமைந்துள்ளது. ஒரு மார்கழி மாதத்தில் தொடங்கிய பணி அடுத்த சித்திரையில் நிறைவுபெற்றது. மன்னன் மகிழ்ந்தான். சேக்கிழாரையும் நூலையும் யானைமேல் ஏற்றி ஊர்வலமாக வந்து, தானே கவரிவீசிச் சிறப்பித்தான்.

திருக்கூடச்சிறப்பு, திருவாரூர் சிறப்பு, சிவனடியார்களின் பெருமை யாவும் பெரிய புராணத்தில் சிறப்பிக்கப்படுகின்றன. உலகில் இருந்து கொண்டே இறைவனை அடையமுடியும் என்ற கருத்தை அடியார்கள் வாழ்வின் மூலம் புலப்படுத்துகிறார். சாதி, சமயம், இனம், காலம், முதலிய வேறுபாடுகள் கடந்ததாக இப்புராணம் அமைந்துள்ளது.

சகிப்புத்தன்மை, இன்னா செய்யாமை, வாய்மை, நீதி, அறவொழுக்கம், சிவனடியாரையும் சிவ சின்னங்களையும் சிவமாக மதிக்கும் தன்மை முதலியவற்றையும் மக்கள் வாழ்வை எக்காலத்திலும் வளம் படுத்தும் வகையிலும் ஆக்கித் தந்துள்ளார். ஒழுக்கத்திலும், நோன்பிலும், அன்பிலும், அருளிலும், பக்தி கொண்ட அடியவர்களைப் பற்றியே பெரிய புராணத்தில் குறிப்பிடுகிறார். சாதி வேற்றுமைக்கு இங்கு இடமே இல்லை. தொண்டர் குலம் தொழுவதற்குரிய குலம் என்ற உண்மையை புலப்படுத்தி உள்ளார். உலகமக்களை மையப்படுத்தியே பெரிய புராணத்தை படைத்தார். தமழில் எழுந்த முதல் காப்பியம் என்றே கூறலாம். சிவநெறி பரப்பிய சோழர்தம் பெருமைகளை மிக அழகாக பக்திச்சுவை சொட்டச் சொட்ட பெரிய புராணத்தை பாடினார். காலம் முழுவதும் பிரம்மச்சாரியாக வாழ்ந்த இவர் வைகாசிப்பூச நாளில் இறைநிலை எய்தினார். அவரால் எழுதப்பட்ட பெரிய புராணத்தை நன்கு படித்தும் பயன் பெறுவோம்.

ற. மௌனிகா
தரம்:-9

## சதாவதானி ந.கதிரவேற்பிள்ளை

1844 ஆம் ஆண்டில் மேலைப்புலோலியின் தம்பசிட்டிக் கிராமத்தில் சைவப் பற்றும் தமிழ் பற்றும் மிகுந்த குடும்பத்தில் திரு நா.கதிரவேற்பிள்ளை திரு அவதாரம் செய்தார். இவர் காசிவாசி செந்திநாத ஐயரிடமும் தி.த. கனசுந்தரம்பிள்ளை என்ற அறிஞரிடமும் தமிழ் இலக்கணம், இலக்கியம், சைவசித்தாந்தம், வடமொழி, தொல்காப்பியம், சங்கஇலக்கியம் என்பவற்றை எல்லாம் கற்றுப் புலமை பெற்றனார். சைவப்பணி, சொற் பொழிவுகள், நூல் வெளியீடுகள், செந்தமிழ் நூல்களுக்கு உரை எழுதுதல், தமிழ் அகராதியை உருவாக்குதல் எனப் பலதுறைகளிலும் பணியாற்றினார். சுப்பிரமணிய கனகசபையை நிறுவித் திருமுறை ஓதும் வழக்கத்தையும் அதற்கு விளக்கம் கொடுப்பதையும், பண்ணோடு பாடுவதையும் வழக்கமாக கொண்டிருந்தார்.

சுப்பிரமணிய பராக்கிரம, சைவ சந்திரிகை, சிவாலய மஹோற்சவ விளக்கம், சைவசித்தாந்த சுருக்கம் ஆகிய நூல்களை எழுதி வெளியிட்டார். இவற்றுடன் கூர்ம புராணங்களை எழுதி வெளியிட்டார். இவற்றுடன் புராணவிரிவுரை ஆகிய நூல்களையும் வெளியட்டார்.

சொற்பஞ்சமின்றி உபந்நியாசங்கள் செய்வதில் சிறந்து விளங்கினார். வித்துவ சபைகளிலும், அரச சபைகளிலும் அஞ்சாது நின்று பேசுவார். தடைப்படாமலும் விரைவாகவும் பல மணி நேரம் நின்று ஆபாச மின்றி பேசும் வன்மை இவருக்கு உண்டு. இவரை வலிந்து வாதுக்களைத்துத் தோல்வியடைந்த வித்துவான்களும் பலராவர். பேரிலக்கியமாகிய தொல்காப்பியமும் தமிழ் மறை ஆகிய தேவர் குறளும் என்றுமிவரது நா நுனியிலிருந்து குதி கொண்டாடும். இவர் அட்டாவதானம் சதாவதானம் செய்வதிலும் ஆற்றல் படைத்தவர். இவர் மாயாவாத்தை நிராகரித்துப் பேசும் தன்மை வாய்ந்த வராதலினாலே சென்னையில் உள்ள வித்துவான்கள் யாவரும் கூடி "மாயாவாத துவம்ச கோளரி" என்னும் பட்டத்தினை வளங்கியுள்ளார்கள். அப்பொழுது அச்சபையிலிருந்து அப்பட்டத்தை அளித்தவர் "ஸ்ரீகாசிவாசி செந்திநாதையர்" என வித்துவ சிரோன்மணி சி. கணேசையர் தனது நூலில் குறிப்பிட்டுள்ளார். பெரும் முயற்சி செய்து அகரவரிசைப்படுத்தி தமிழிலே மிகச்சிறந்த அகராதி ஒன்றை உருவாக்கினார். சைவத்தமிழ் அறிஞராக இருந்த திரு.வி. கலியாணசுந்தரனார் இவரின் மாணவராவர்.

ஒரே நேரத்தில் நூறு விடையங்களைப் புரிய வல்லவரைச் "சதாவதானி" என்பர். கதிரவேற்பிள்ளை சதாவதானக் கலையில் மிகச்சிறந்து விளங்கிளார். 24.02.1907 அன்று சென்னை இலக்கிய விலாச மண்டபத்தில் இவரால் ஆயிரக்கணக்கானோர் மத்தியில் "சதாவனம்" நிகழ்த்தப்பட்டது. ஒரேசமயத்தில் பல துறைசார் வினாக்களை அறிஞர் பெருமக்கள் தொடுத்த போது அவற்றிறகெல்லாம் தக்கபதில்களை வழங்கியதோடு விதிக்கப்பட்ட நிபந்தனைக்கமைய கவி பாடியும் தமது திறமையை வெளிப்படுத்தி "சதாவதானி" எனும் பெருமைக் குரியவரானார்.

நாவலர் பெருமானின் அடிச்சுவட்டைப் பின்பற்றி நல்லாசிரியனாக, தர்க்கவாதியாக, உரையாசிரியராக, நூற்பதிப் பாசிரியராக விளங்கிய கதிரவேற்பிள்ளையின் ஒப்பற்ற பணிகள் என்றும் போற்றற்குரியனவாகும். 63 ஆண்டுகளே வாழ்ந்த இப் பெருமகனாரின் வாழ்வு 1907 இல் தமிழ்நாடு நீலகிரியில் நிறைவுற்றது. புலோலியூர் கதிரவேற்பிள்ளை அவர்கள் மறைந்தும் எம்மனதில் மறையாமல் வாழ்ந்து கொண்டிருக்கிறார்.

கு. மாதங்கி
ஆண்டு:-8

## ஆசிரியம் பேசுகிறது

அன்னையின் அன்புடன்
தந்தையின் கண்டிப்பும்
ஈசனவன் வள்ளண்மையும்
இணைந்ததுதான ஆசிரியம்
மூங்கில் காட்டில்
புல்லாங்குழல் செய்வது போல
முழுதான பாறையில்
சிற்பம் செதுக்குவது போல
அடுக்கி வைத்த காகிதத்தில்
ஓவியம் வரைந்து இரசிப்பது போல
குழைத்து வைத்த களிமண்ணை
மட்பாண்டமாய் உருமாற்றுவது போல
அடுக்கள் இருந்தால்
சமைப்பது கடினமல்ல
இருப்பதை கொண்டு
படைப்பது சுலபமல்ல
இரண்டுக்குமிடையில்
கற்பிப்பதும் இலகுமல்ல
மனிதம் புகழ்பெற அறிவைப் புகட்டிடும்
மகத்துவப் பணியாம் ஆசிரியப்பணி,
தேடல் கொண்டவர்களுக்கு
அது இலகு
தேடல் இல்லாதவர்களுக்கு அது மிளகு
இது இருந்தால்
இருதரப்புக்கும் அழகு
ஆசானின் கண்டிப்பு
தண்டிப்பு அல்ல
மாணவனிடம் உள்ள
சொக்கடிக்கும் மின்சாரத்துக்கான
துடிப்பு
ஏடெடுத்த மாணவர்களுக்கு
உவகையுடன் கற்பித்து
ஊர் போற்ற காண்பதில் தான்
ஆசானின் மகிழ்விருக்கு, மதிப்பிருக்கு.

கு.மீரா

**திருநெறிய தமிழ்மறைக்கழகம் நடாத்திய பண்ணிசைப் போட்டியில் முதல் இடங்களை பெற்றோர்.**

**கீழ்ப்பிரிவு**

முதலாமிடம் மயூரன் மதுவந்தி
தெல்லிப்பழை மகாயனாக் கல்லூரி

இரண்டாமிடம் கணேசானந்தன் கனிமொழி
தெல்லிப்பழை மகாயனாக் கல்லூரி

மூன்றாமிடம் 1. இராஜேஸ்வரன் ஜனனி
யாழ் இந்து ஆரம்ப பாடசாலை
2. பாலேந்திரன் பத்மஜா
யாழ் இந்து மகளிர் கல்லூரி

நான்காமிடம் கு. சர்மிளா
பரராஜசேகரப்பிள்ளையார் அறநெறிப்பாடசாலை

**மத்தியபிரிவு**

முதலாமிடம் கணேசலிங்கம் தனுஜன்
கட்டுடை அறநெறிப்பாடசாலை

இரண்டாமிடம் தெய்வேந்திரம் சோபர்னா
தெல்லிப்பழை மகாயனாக் கல்லூரி

மூன்றாமிடம் சிவனேசன் இராகப்பிரியா
யாழ் இந்து மகளீர் கல்லூரி

நான்காமிடம் சாந்தகுமார் திகாபரன்
பரராஜசேகரப்பிள்ளையார் அறநெறிப்பாடசாலை

ஐந்தாமிடம் செந்தில்வேல் செல்வர்ஷினி

**மேற்பிரிவு**

முதலாமிடம் இராமகிருஸ்ணன் லதாங்கி
வேம்படி மகளீர் கல்லூரி கிழவன்காடு காரைநகர்


இரண்டாமிடம் சுகுமார் சஞ்சிகா
தெல்லிப்பழை மகாயனாக் கல்லூரி

மூன்றாமிடம் இந்திரஜித் சங்கீர்த்தனன்
பரராஜசேகரப்பிள்ளையார் அறநெறிப்பாடசாலை


நான்காமிடம் கிருஷ்ணமூர்த்தி நிதர்ஷன்
கட்டுடை அறநெறிப்பாடசாலை

## இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடாத்திய ஆக்கத்திறன் போட்டிகளின் பெறுபேறுகள்

குழு நடனம்: தேசிய மட்டத்தில் 2ம் இடம் 14 மாணவர்கள்
மாவட்டமட்டத்தில்



மாவட்டத்தில்





❀ ஜெயசீலன் பபிசாலினி
(ஆண்டு – தனிநடனம் 1ம் இடம்)



❀ இந்திரஜித் சங்கீர்த்தனன்
ஆண்டு 9 கட்டுரை 1ம் இடம்
கற்பகவிநாயகர் கட்டுரை 1ம் இடம்

வில்லிசை மாவட்டம் முதலாமிடம்

- ❀ சா. திவாபரன்
- ❀ சி. ஆருஜன்
- ❀ ஜெ. பபிசாலினி
- ❀ சி. வினுஜன்
- ❀ ம. மோவிந்தா
- ❀ தி. திவ்ஜாங்கசர்மா
- ❀ ம. ஜனனி

❀ மதியழகன் மோவிந்தா
சித்திரம் 3ம் இடம்



❀ குலேந்திரன் தேனுசா
சித்திரம் மாவட்டம் 1ம் இடம்

## தர்மாசிரியர் பரீட்சையில் சித்தியடைறந்தோர்



குலேந்திரன் அனுசன்



கணேசமூர்த்தி மோகனஜெனனி



சாந்தகுமார் குகப்பிரியா

**இறுதியாண்டு பரீட்சையில் சித்தியடைந்த மாணவன்**
**தேவகரன் தீபன்**

## பரராஜசேகரப்பிள்ளையார் அறநெறிப்பாடசாலை
## தேசிய விருது பெற்றோர் 2015



- ஜெயசீலன் பபிசாலினி
- புஸ்பராசா ஹர்சினி
- மதியழகன் மோவிந்தா
- குலேந்திரன் தேனுசா
- தயாநந்தன் ஆரணி
- மதியழகன் ஜனனி
- புஸ்பராசா விதுசனா
- குமாரராசா ரோகினி
- வெல்வராசா விதுர்ஷிகா
- குபேந்திரன் பிரதியுக்ஷா
- மணிமாறன் சங்கீதா
- தேவகுமார் மதுசா
- குகதாஸ் சர்மினி
- கஜேந்திரன் கேசினி



நடனம் பயிற்றுவித்த நடன ஆசிரியர்கள்



திருமதி
உமாமகேஸ்வரி அம்பிகைரூபன்



செல்வி
சர்மினி பரமலிங்கம்

# நன்றியுரை



ஸ்ரீ பரராஜசேகரப்பிள்ளையார் கோயில் திருநெறிய தமிழ்மறைக் கழகம், ஸ்ரீ பரராஜசேகரப்பிள்ளையார் அறநெறிப்பாடசாலை ஆலயத்துடன் இணைந்த வகையில் சமய சேவையை ஆற்றி வருகிறது. கழகத்தினதும் பாடசாலை வளர்ச்சிக்கும் பலரும் தமது பங்களிப்பினை வழங்கி வருகின்றனர். அறநெறிப்பாடசாலை மாணவர்கள் மாவட்ட, தேசிய மட்ட போட்டிகளிலில் பங்கு பற்றி வெற்றியீட்டுவதற்கு முன்னின்று செயற்பட்ட ஆசிரியர்கள், பெற்றோர்கள், அமைப்பாளர், உறுப்பினர்கள் மற்றும் உதவி வழங்கிய பெருந்தகைகள் யாவருக்கும் இந்நேரத்தில் நன்றிகளைத் தெரிவித்து கொள்கிறோம்.

எமது பாடசாலை இயங்குவதற்கான இடமளித்து தொடர்ந்தும் உதவிகள் நல்கி வருகின்ற பரராஜசேகரப்பிள்ளையார் மணிமண்டபத்தினருக்கும் பல்வேறு வகையில் உதவிகளை வழங்கி வருகின்ற அன்பர்களுக்கும் நன்றிகள் பல. ஆண்டு தோறும் தங்கப்பதக்கங்கள் தந்து உதவியவர்கட்கும், பொன்னுத்துரையின் ஞாபகாரத்தமாக அவரது மகன் ஐங்கரன் அவர்கள் வருடாவருடம் பண்ணிசைப்போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு தங்கப்பதக்கம் தருவதாக ஒப்புக் கொண்டமை மகிழ்ச்சிக்கும் நன்றிக்கும் உரிய விடையமாகும், பரராசம் எனும் இந்நூலுக்காக ஆக்கங்களை வழங்கிய மாணவர்கள், ஆசிரியர்கள், ஆசியுரை வழங்கிய ஆலய குருக்கள் ஐயா அவர்களுக்கும் வாழ்த்துரை வழங்கிய எமது கழகப் போசகர் பேராசிரியர் க.தேவராஜா அவர்கட்கும் நன்றியை தெரிவிக்கிறோம். மெலும் இந்நூலினை அழகிய முறையில் அச்சிட்டுத்தந்த கஜன் அச்சகத்தினருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

சொ. ஹரிசங்கர் ஆசிரியர்
கழகப் பொருளாளர்




திருநெறிய

